# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2046 - 2017 නොවැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2017.11.17

*2046 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2078* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2110* |


***கவனிக்க.-*** (i) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் 2017, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) புலமைச்சொத்து (திருத்தம்) சட்டமூலம் 2017, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2075 - B81226 - 5,403 (2017/11)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** யில் அல்லது **தமிழ் மொழி** யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்:-*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

*திருத்தம்*

## *கிராமிய பொருளாதார அமைச்சு*

*கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017*

*2017.10.13 ஆந் திகதிய இலக்கம் 2041 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியின் III ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குரிய விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.*

*2. அந்த அறிவித்தலில் 4 ஆம் பந்தியின் "தரம் முறைமைக்கு ஆரம்ப சம்பளப்படி நிலைகள்" கீழே காட்டப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*"தரம் முறைமைக்கு ஆரம்ப சம்பளப் படிநிலைகள்"*

| *தரம்* | *ஆரம்ப சம்பளப் படிநிலை* | *ஆரம்ப சம்பள நிலை* |
|---|---|---|
| III | *படிநிலை 01* | *ரூபா 47,615* |
| II | *படிநிலை 12* | *ரூபா 62,595* |
| I | *படிநிலை 20* | *ரூபா 76,175* |

*3. மேற்போந்த அறிவித்தல் விண்ணப்பதாரர் தெரிந்து கொள்வதற்காக வெளியிடப்படுகின்றது என்பதை அறியத் தருகின்றேன்.*

*டாக்டர் ஆர். எம். ஆரியதாஸ,*
*கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.*

*11-693*

---

## *அரச சேவை ஆணைக்குழு*

*விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி விளையாட்டுப் பணிப்பாளர் பதவிக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு - 2017*

*விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைப் பிரிவின் III ஆம் தரத்தின் உதவி விளையாட்டுப் பணிப்பாளர் பதவியில் காணப்படும் 3 வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகள் கொண்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தைக் கீழ்க்குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 7" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவி விளையாட்டுப் பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2017" எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.*

*(அ) விண்ணப்பப்படிவத்தைக் கோரும் இறுதித் திகதி : 2017.12.04 ஆகும்.*

***குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட கடிதம் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதிக்கப்பட்டதாக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் குறித்து கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதிவரை விண்ணப்பப்படிவத்தைத் தாமதிக்கச் செய்வதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரர்கள் தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

*1. **சேவைக்குச் சேர்த்துக்கொள்ளும் முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் மூலம் அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை மூலம் நடாத்தப்படும் தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்முகப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் திறமைத்*

தொடருக்கமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். இதன்போது அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் 8 இன்கீழ் குறிப்பிடப்பட்ட புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்கமுகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலாகும் திகதி அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவிற்கமைய தீர்மானிக்கப்படும்.

2. சம்பள அளவு.- இப்பதவி பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 3/ 2016 கொண்ட சுற்றறிக்கைக்கமைய SL-1-2016, ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 (மாதாந்த) சம்பள அளவாகும். (2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றிக்கை இலக்கம் 03/ 2016 இன் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய இதன் உப ஆவணத்தின் II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் உரித்தாகும்.)

**3. சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்நியமனம் ஓய்வூதிய சம்பளம் கொண்டது. மேலும் தாங்கள் விதவைகள்/ தபுதாரர் ஓய்வூதியச் சம்பளத் திட்டத்திற்கு/ தபுதாரர் ஆண்கள் மற்றும் விதவைகள் ஓய்வூதியச் சம்பளத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் இடைக்கிடையேக பணிக்கப்படக்கூடியவாறு தங்களினால் அதற்காக பங்காளர் நிதி செலுத்தப்பட வேண்டும் ;

(ii) இப்பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர் ஒரு வருட கால பதில் கடமைக்கு உட்படுவர் ;

(iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 1/ 2014 மற்றும் அதற்கிணைவான சுற்றறிக்கைக்கமைய மொழி தொடர்பிலான தேர்ச்சி மட்டம் 5 வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழிமூலம் சேவைக்குச் சேர்ந்திருப்பின் உத்தியோகத்தர் உரிய மொழித் தேர்ச்சியைத் தகுதிகாண் காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும் ;

(iv) அரச சேவை ஆணைக்குழு மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரசாங்க நிதிக் கோவைகளுக்கும் திணைக்கள மயப்படுத்தப்பட்ட ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

**4. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் உட்பட அனுபவங்கள் :**

(i) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர்களினது இணைந்த சேவையின் முகாமைத்துவ உதவியாளர் விசேட வகுப்பின் உத்தியோகத்தராக இருத்தல் ;

அல்லது

(ii) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் அல்லது இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவின் I ஆம் தர உத்தியோகத்தராக இருத்தல் ;

அல்லது

(iii) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவையின் II ஆம் தரத்தின் உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விளையாட்டு அல்லது முகாமைத்துவத் துறைக்குரிய பட்டத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(iv) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவைப் பதவி ஒன்றில் அல்லது பதவிகளில் 10 ஆண்டுகால தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்திய உத்தியோகத்தராக இருத்தல் ; மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விளையாட்டுத் துறைக்குரிய பட்டத்தைப் பெற்றிருத்தல்.

5. **உடற்தகைமை.**- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமையை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல் உளத் தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6. **வயதெல்லை.**- சம்பந்தப்பட்டதல்ல.

7. **ஏனைய தகைமைகள் :**

(i) பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் ;

(ii) அண்மித்த 5 வருடங்களுக்குள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் ;

(iii) உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

(iv) உரிய மட்டத்தில் ஏனைய அரச மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் ;

(v) விண்ணப்பப்படிவத்தைக் கோரும் இறுதித் தினமன்று பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் சகல முறைகளிலும் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

8. **தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை.**- அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை சபையினால் புள்ளிகள் வழங்கப்படுவதுடன் அந்நேர்முகப் பரீட்சையின்போது தகைமைகள் பரிசீலனை செய்யப்படும்.

கட்டமைக்கப்பட்ட புள்ளி ஒழுங்கு விதிமுறைகள் :

| | புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | | புள்ளி அளவு |
|---|---|---|---|
| 1 | மேலதிக சேவை அனுபவம் | (i) விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவை முகாமைத்துவ உதவியாளர் மேற்பார்வை பதவிக்கு நியமனம் பெற்ற தினம் தொடக்கம் ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள் வீதம் (தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர்) ;<br>அல்லது<br>(ii) மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவையின் முதலாம் வகுப்பிற்கு நியமனம் பெற்ற தினம் தொடக்கம் ஒரு வருடத்திற்கு 4 புள்ளிகள் வீதம் (பயிற்றுவிப்பாளர் தரம்) ;<br>அல்லது<br>(iii) மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவின் II ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி தொடக்கம் ஒரு வருடத்திற்கு 3 புள்ளிகள் வீதம் ;<br>அல்லது<br>(iv) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவையின் பதவியில் அல்லது பதவிக்கு நியமனம் பெற்று 10 ஆண்டுகள் பூரணமடைந்த தினம் தொடக்கம் ஒரு வருடத்திற்கு 2 புள்ளிகள் வீதம். | 30 |
| 2 | மேலதிக கல்வித் தகைமை | பட்டப்பின் பட்டத்திற்காக - 25 புள்ளிகள்<br>பட்டப்பின் பட்ட டிப்ளோமாவிற்கு - 20 புள்ளிகள்<br>பட்டத்திற்காக (விளையாட்டு அல்லது உடற்பயிற்சி, விளையாட்டு முகாமைத்துவம் அல்லது நிர்வாகம்) - 15 புள்ளிகள்<br>டிப்ளோமாவிற்காக - 10 புள்ளிகள்<br>சான்றிதழ் பாடநெறிக்காக (6 மாதங்களைவிடக் குறையாத) - 5 புள்ளிகள்<br>(பட்டம் அடிப்படைத் தகைமையாக இல்லாத பட்சத்தில் புள்ளி வழங்கப்படும்.) | 25 |

| | புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | | புள்ளி அளவு |
|---|---|---|---|
| 3 | பயிற்றுவிப்பாளர் பதவி மற்றும் தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் காண்பிக்கப்பட்ட விசேட திறமைகள் | (i) பயிற்றுவிப்பாளர் அல்லது நிருவாகியாக அல்லது ஏற்பாட்டாளராக ஏனைய பதவிகளை வகித்து,<br>(1) தேசிய மட்டத்தில் - 10 புள்ளிகள்<br>(2) தெற்காசிய மட்டத்தில் - 10 புள்ளிகள்<br>(3) பொதுநலவாய சபை உலகக் கிண்ணம் - 5 புள்ளிகள்<br>(ii) 230B கொண்ட பொது மாதிரிப்படிவத்தின் ஊடாகப் பெற்றுள்ள பாராட்டுச் சான்றிதழ் - ஒரு சான்றிதழுக்கு 2 புள்ளிகள் வீதம் - 10 புள்ளிகள் | 20 |
| 4 | மேலதிக தொழில்சார் தகைமைகள் | விளையாட்டு அல்லது நிருவாகம் சார்ந்த பாடங்கள் தொடர்பாக தொடர்ந்துள்ள பாடநெறி<br>உள்நாடு -<br>(1) ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட - 10 புள்ளிகள்<br>(2) 6 மாதம் அல்லது அதனைவிட மேற்பட்ட - 7 புள்ளிகள்<br>(3) இரண்டு வாரங்களைவிட மேற்பட்ட - 5 புள்ளிகள்<br>(4) இரண்டு வாரங்களைவிடக் குறைந்த 2 தினங்களைவிட மேற்பட்ட - 3 புள்ளிகள்<br>வெளிநாடு -<br>(1) ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட - 10 புள்ளிகள்<br>(2) 6 மாதம் அல்லது அதனைவிட மேற்பட்ட - 8 புள்ளிகள்<br>(3) இரண்டு வாரங்களைவிட மேற்பட்ட - 6 புள்ளிகள்<br>(4) இரண்டு வாரங்களைவிடக் குறைந்த 2 தினங்களைவிட மேற்பட்ட - 4 புள்ளிகள் | 20 |
| 5 | நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் திறமைகள் | புள்ளிகள் - 5 | 5 |
| | | மொத்தம் | 100 |

விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவைப் பதவிக்குச் சேர்த்துக்கொள்ளும்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களுக்காக மீண்டும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

9. விண்ணப்பப்படிவம் 22 x 29 சென்றி மீற்றர் அளவில் ஏ4 கடதாசிகளில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் இலக்கம் 1 தொடக்கம் 7 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், 8 தொடக்கம் இறுதி வரையான தலைப்புக்கள் இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டும். அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்துக்களினால் தெளிவாக உள்ளடக்க வேண்டும். சகல முறைகளிலும் பூரணப்படுத்தப்படாத அடிப்படைத் தகைமைகள் அற்ற உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் முன் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரியினால் வினவ வேண்டியதுடன் அவ்வாறு இல்லாத பட்சத்தில் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்றும் மேலும் அறியத்தருகிறேன்.

விண்ணப்பப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்படமாட்டாது.

**கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் :**

(அ) விண்ணப்பப்படிவத்துடன் எந்தவொரு ஆவணம் அல்லது அதன் பிரதிகள் இணைக்கப்படக் கூடாது ;

(ஆ) கோரப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் விண்ணப்பப்படிவம் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

10. **போலித் தகவல்களை வழங்குதல்.**- தங்களினால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் தங்களது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும். அவ்வாறான உண்மைக்குப் புறம்பான தகவல்கள் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அது தொடர்பிலான உரிய செயற்பாடுகளுக்குட்பட்டு சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

11. அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள், காலத்திற்குக் காலம் அரச சேவை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் நிறைவேற்று சேவைப் பிரிவின் III ஆம் தரத்திற்குரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள மறுசீரமைப்புகளின் நிபந்தனைகள் இப்பதவிக்குரியதாகும்.

12. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் இருப்பின் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம் இடம்பெறும். அத்துடன் வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாதிருக்க அல்லது ஒரு பகுதியினை நிரப்புவது தொடர்பில் இறுதித் தீர்மானம் அரச சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம்,

ஜயந்த விஜேரத்ன,
செயலாளர்,
விளையாட்டுத்துறை அமைச்சு.

இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விளையாட்டுத்துறை அமைச்சு**

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவை நிறைவேற்று சேவைத் தரத்தின் (SL-01-2016) III ஆம் தரத்தின் உதவி விளையாட்டுப் பணிப்பாளர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்த்தல்

1. (i) முதலெழுத்துக்களுடன் இறுதியில் வரும் பெயர் :
   (அ) தமிழில் :----.
   (ஆ) ஆங்கிலத்தில் :----.

   (ii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும்பெயர் :
   (அ) தமிழில் :----.
   (ஆ) ஆங்கிலத்தில் :----.

2. (i) தனிப்பட்ட முகவரி :----.
   (ii) அனுமதிப்பத்திரத்தை அனுப்பவேண்டிய முகவரி :----.
   (iii) அலுவலக முகவரி :----.
   (iv) தொலைபேசி இலக்கம் (கையடக்க) :----.

3. ஆண்/பெண் பால் :
   ஆண் - 0
   பெண் - 1 ☐
   (உரிய கூட்டினுள் சரியான இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

5. பிறந்த திகதி :

ஆண்டு ----, மாதம் ----, திகதி ----.

6. 2017.06.01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----.

7. (அ) விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் முதலாவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா ?

கல்வி, தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் :----.

வர்த்தமானி அறிவித்தலில் 1.1 வாசகத்திற்கமைய தகைமை பெறுவது 1.1 இல் I, II, III, IV ஆகியவைகளில் எவையெனக் குறிப்பிடவும் :----.

(i) பட்டம் பெற்ற திகதி :----.
(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
(iii) பதிவு இலக்கம் :----.
(iv) வெளி/உள்ளக :----.
(v) பட்டம் :----.
(vi) பாடங்கள் :----.

(ஆ) தற்போது வகிக்கும் பதவி :----.
தரம் :----.
பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
இப்பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்ட திகதி :----.
சம்பளக் குறியீட்டு இலக்கம் மற்றும் சம்பள அளவு :----.

விண்ணப்பிப்பதற்காக தகைமைபெற பல சேவைக்காலங்கள் உரியதாயின் அத்தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் தொடர்பான விபரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட வேண்டும் :----.

(இ) வர்த்தமானி அறிவித்தலில் முதலாவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட பதவியின் சேவையில்/ தரத்தில் தகைமைகள் பூர்த்திசெய்ய வேண்டிய 2017.06.01 ஆந் திகதியன்று தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் :----.

| சேவை/தரத்தின் பெயர் | உரிய பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைய சம்பளக் குறியீட்டு இலக்கம் உ-ம் : MN 3-2016 | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

8. மேலதிக கல்வித் தகைமைகள் :----.

9. பயிற்றுவிப்பாளர் பதவியில் மற்றும் தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் காண்பிக்கப்பட்ட விசேட திறமைகள் :----.

10. மேலதிக தொழில்சார் தகைமைகள் :----.

11. (i) 2017.06.01 ஆந் திகதியன்று அண்மித்த 5 ஆண்டுகளுக்குள் உரிய சம்பளப்படி உயர்வு பெறப்பட்டுள்ளதா ?/ இல்லையா ? என்பது தொடர்பாக :----.

(ii) 2017.06.01 ஆந் திகதியன்று 5 வருடங்களுக்குள் எச்சரிக்கை தவிர வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்டுள்ளது/இல்லை என்பது தொடர்பாக :----.

12. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

(i) இவ்விண்ணப்பப்படிவம் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கமைய நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதும் என கௌரவமாய் தெரிவிக்கிறேன்.

(ii) என்னால் வழங்கப்பட்டுள்ள இவ்வெளிப்பாடுகள் உண்மைக்குப் புறம்பானது என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் நான் சேவைக்குச் சேர்த்துக்கொள்ள முன்னர் தகைமையற்றவராகவும், நியமனம் பெற்றதன் பின்னர் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் சேவையில் இருந்து நீக்கவும் கட்டுப்படுவதாக அறிவிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. திணைக்களப் பொறுப்பாளரின் உறுதியுரை :
இவ்விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி .................................................. எனது திணைக்களத்தில் நிரந்தர ஓய்வூதியம் கொண்ட ...................................................... பதவியில் சேவையாற்றுவதுடன் கடந்த 5 வருட காலங்களுக்குள் அவர் சகல சம்பளப்படி உயர்வுகளையும் பெற்றுள்ளதாகவும் அவர் ஏதேனும் ஒரு வகையில் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர) உட்படவில்லை என்றும் தற்போது ஒழுக்காற்று விசாரணைக்குட்படவில்லை என்றும் அவர் இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிப்பதாக/ விடுவிக்கப்பட மாட்டாது என்பதை இத்தால் உறுதியளிக்கிறேன்.

----,
திணைக்களப் பொறுப்பாளரின் அதிகாரம்பெற்ற
உத்தியோகத்தரின் கையொப்பம் (பதவி முத்திரை).

திகதி :----.

11-778

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு

**இலங்கையில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் III ஆம் தர கால்நடை மருத்துவ அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2017**

இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III இல் நூற்றுப்பன்னிரண்டு (112) கால்நடை மருத்துவ அதிகாரி பதவிகளுக்காக நியமிப்பதற்குத் தகைமையுடையவர்களைத் தெரிவுசெய்வதற்காக கால்நடை மருத்துவ விஞ்ஞானப் பட்டதாரிகளிடமிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்களுக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் முடிவிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், த. பெ. இல. 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III கால்நடை மருத்துவ அதிகாரி பதவி" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2017, திசெம்பர் 15 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான கடிதங்கள் தபாலில் அனுப்பும்போது காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப்பங்களைத் தாமதப்படுத்துவதனால் ஏற்படும் நட்டங்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்றல் வேண்டும். அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*1. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை** :*

(i) *கால்நடை மருத்துவ அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வது பேராதனை பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்தினால் வெளியிடப்படும் திறமைப் பட்டியல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் கால்நடை மருத்துவப் பட்டத் தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள், இலங்கைக் கால்நடை மருத்துவச் சபையில் பதிவுசெய்வதற்கான தகைமையைப் பூர்த்திசெய்துள்ள ஆண்டுக்கான பதிவுத் திகதியின் வரிசைக் கிரமப்படி திறமைப் பட்டியலில் கடைசியாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.*

(ii) *வெற்றிட எண்ணிக்கையில் நூற்றுக்கு நூற்றுப்பத்து (110%) வீதத்துக்குச் சமமான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், திறமைப் பட்டியலின் தொடர் முறையின் பிரகாரம் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.*

(iii) *நியமனதாரிகளின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் நிர்ணயிக்கப்படும்.*

*2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :*

(i) *நியமனம் நிரந்தரமானது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் பற்றி அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்துக்கு உட்படுதல் வேண்டும்.*

(ii) *தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் கால்நடை மருத்துவ அதிகாரி பதவியினை நிரப்புவதற்காக நியமிக்கப்படுவர்.*

(iii) *01/ 2014 எனும் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தின் பிரகாரமும் அதற்கு இடைநேரான சுற்றுநிருபங்களின் பிரகாரமும் குறித்த மட்டத்தில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழியில் சேவையில் அமர்த்த தகைமை பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் சேவையில் நிரந்தரமாக்கப்பட முன்னர் அரச கரும மொழி ஒன்றில் III ஆம் மட்ட தேர்ச்சியைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

(iv) *இந்நியமனம் தொடர்பான ஏனைய சேவைக் கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் 2013.12.13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் நியதிச் சட்டக்கோவை மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தக் கட்டளைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை நியதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் திணைக்களங்களுக்கான ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.*

*3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 2016.02.25 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இப்பதவிக்குரிய மாதச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூ. 1,10,895. (SL-1-2016 ஆகும்) தங்களுக்குச் சம்பளம் வழங்கப்படுவது குறித்த சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு ஆகும்.*

*4. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட கால்நடை மருத்துவ விஞ்ஞானம் பற்றிய பட்டம்.*

5. **வயதெல்லை**.- *விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*6. **உடற்தகைமை** :*

(i) *சகல விண்ணப்பதாரிகளும் இலங்கை நாட்டில் எந்தவொரு பகுதியிலும் பணிபுரிவதற்கும்,*

(ii) *பதவியில் கடமையாற்றுவதற்குப் போதியளவு உடல் மற்றும் உள ரீதியாக தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டிய அதே வேளை சிறந்த தேகாரோக்கிய நிலை மருத்துவ பரிசோதனை அறிக்கை மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.*

7. **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) கால்நடை மருத்துவ அதிகாரி மற்றும் கால்நடை மருத்துவ அதிகாரி தொழிற்சட்டத்தின்கீழ், இலங்கை கால்நடை மருத்துவச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று, இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் அனைத்து வழிகளிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. **நேர்முகப் பரீட்சை :**

8.1 பொதுவான நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).- நிறைவேற்றுவதற்கு உத்தேச நோக்கங்கள்.- ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகள் மற்றும் அதற்கு அமைவாக வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா ? என்பதனைப் பரிசீலித்தல் மற்றும் உடற்தகைமைகளைப் பரிசீலித்தல்.

9. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பப்படிவம் 22-29 செ. மீ. அளவில் A4 கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ii) நேர்முகப் பரீட்சைக்காக அறிவிக்கப்பட்ட பின்னர் கீழ்க்காணும் ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(a) பிறப்புச் சான்றிதழ் ;
(b) பட்டம் மற்றும் உரிய சான்றிதழ்கள் ;
(c) அண்மையில் பெறப்பட்ட இரண்டு நன்நடத்தைச் சான்றிதழ்கள் (அதில் ஒன்று வதிவுப் பிரதேச கிராம உத்தியோகத்தரிடம் பெறப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;
(d) சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சித்தியடைந்துள்ள உயர் பரீட்சைகளின் சான்றிதழ்கள் ;
(e) கால்நடை மருத்துவராக இலங்கை கால்நடை மருத்துவச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ்.

10. **வேறு ஏற்பாடுகள் :**

(i) இவ்வர்த்தமானி அறிவித்தலில் விதிக்கப்படாத விடயங்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரம் அரச சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

(ii) வெற்றிடங்களை நிரப்புதல், நிரப்பாமை அல்லது ஒரு பகுதியை மாத்திரம் நிரப்புவது பற்றிய இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

(iii) இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரி ஒருவருக்கு தகைமைகள் இல்லையென வெளிப்படும் பட்சத்தில் அவரின் அபேட்சகத் தன்மை இரத்துச்செய்யப்படும்.

(v) விண்ணப்பதாரி ஒருவரினால் முன்வைக்கப்பட்டுள்ள ஏதாவது விடயமொன்று பிழையானது எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என வெளிப்படுமாயின் அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்று வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருப்பின் அவரை சேவையிலிருந்து நீக்க முடியும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எஸ். சேனாநாயக்க,
செயலாளர் (பதில் கடமை),
கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு.

2017, ஒற்றோபர் 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III கால்நடை மருத்துவ அதிகாரி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   தமிழில் :----.
   ஆங்கிலத்தில் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

   (ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

3. தபால் முகவரி (முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமாயின் உடனடியாக அதுபற்றி அறிவிக்கப்படல் வேண்டும்) : ----.

4. நிரந்தர வதிவிடத்தைச் சேர்ந்த-

   (i) மாகாண சபை :----.

   (ii) மாவட்டம் :----.

5. பிறந்த திகதி :

   ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

   விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6. (அ) நீங்கள் இலங்கை பிரசையா என்பது பற்றி :----.

   (ஆ) இனம் (சிங்களவர்/ இலங்கைத் தமிழர்/ இந்தியத் தமிழர்/ முஸ்லிம்கள்/ ஏனையவை) :----.

7. (அ) பால் (ஆண்/ பெண்) :----.

   (ஆ) விவாகமானவரா/ விவாகமாகாதவரா/ விதவையா என்பது பற்றி :----.

8. கல்வித் தகைமைகள் :

| சித்தி பெற்றுள்ள பட்டம்/ பட்டப்பின் படிப்புத் தகைமை | வகுப்பு | பல்கலைக் கழகம் | பட்டம் பூர்த்தி செய்யப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

9. இலங்கை கால்நடை மருத்துவச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட இலக்கமும் திகதியும் :----.

10. சேவை விபரங்கள் (தற்போது நிரந்தரப் பதவி வகிப்பவராயின்) : ----.

| தற்போது வகிக்கும் பதவி | சேவைக் காலம் | | சேவையாற்றும் இடம் | திணைக்களம்/ மாகாண சபை |
|---|---|---|---|---|
| | இருந்து | வரை | | |
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

11. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் நான் அறிந்த அளவில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். என்னால் வெளியிடப்பட்ட தகவல்கள் பொய்யானது அல்லது தவறானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் வெளிப்படுமாயின் நான் தகுதியற்றவர் ஆவேன் என்பதையும் இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் தெரியவரும் பட்சத்தில் எதுவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிந்துள்ளேன். நான் எந்தவொரு நீதிமன்றத்திலும் தண்டனைக்குரிய குற்றத்திற்கு ஆளாகவில்லையெனவும் இத்தால் எனது வழமையான கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரசாங்கத்தில் நிரந்தரப் பதவி வகிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் ஏற்புடையது)

1. திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ................................................ இத்திணைக்களத்தில் .......... ......................................... மாகாண சபையில் ...................................... பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் எனவும் இவ்விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அவரின் தனி நபர் கோவையின் பிரகாரம் சரியானது என உறுதிப் படுத்துகிறேன். இவ் அலுவலர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவரை இத்திணைக் களத்திலிருந்து/மாகாண அரச சேவையிலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது எனவும் சான்றுப்படுத்துகின்றேன். (பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடுக.)

----,
திணைக்கள/ நிறுவனத் தலைவரின்
கையொப்பம்.

பதவி முத்திரை :----.
முகவரி :----.
திகதி :----.

11-800

---

## இலங்கை நிரந்தர/ தொண்டர் கடற்படை (ஆண்/ பெண்) உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர/ தொண்டர் கடற்படை (ஆண்/ பெண்) உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பின்வரும் துறைகளுக்கு தகைமையுடைய ஆண்/ பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

(அ) **நிறைவேற்றுநர் பிரிவு (நிரந்தரக் கடற்படை)**

**பதவி.-** *துணை லெப்டினனட் (ஆண்)*

***கல்வித் தகைமைகள்.***- இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானத்துறையில் சாதாரண பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

***வயது.***- 30 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

(ஆ) **கடற்சார் பொறியியல் பிரிவு (நிரந்தரக் கடற்படை)**

***பதவி.***- லெப்டினன்ட் (ஆண்)

***கல்வித் தகைமைகள்.***- இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் கடல்சார்/இயந்திரப் பொறியியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

***வயது.***- 32 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

(இ) **மோட்டார் வண்டி பொறியியல் பிரிவு (நிரந்தரக் கடற்படை)**

***பதவி.***- லெப்டினன்ட் (ஆண்)

***கல்வித் தகைமைகள்.***- இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் இயந்திர/மோட்டார் வண்டி பொறியியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

***வயது.***- 32 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

(ஈ) **மருத்துவ/பல் மருத்துவப் பிரிவு (நிரந்தரக் கடற்படை)**

1. **பதில் கடமையாற்றும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)**

***கல்வித் தகைமைகள்.***- MBBS மூன்றாம் பரீட்சையில் பகுதி I மற்றும் பகுதி II ஐப் பூர்த்தி செய்திருத்தல் (இறுதி ஆண்டில் கல்வி கற்றல்), பல் மருத்துவப் பட்டப்படிப்பில் BDS இறுதி ஆண்டில் பகுதி I ஐப் பூர்த்தி செய்திருத்தல்

***வயது.***- 18 வயதுக்கும் 26 வயதுக்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

2. **துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)**

***கல்வித் தகைமைகள்.***- MBBS இறுதி ஆண்டைப் பூர்த்தி செய்திருத்தல்/BDS இறுதி ஆண்டில் பகுதி II ஐப் பூர்த்தி செய்திருத்தல்

***வயது.***- 30 வருடங்களுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

3. **லெப்டினன்ட் (ஆண்/பெண்)**

***கல்வித் தகைமைகள்.***- மருத்துவ/பல் மருத்துவ பட்டத்தை (MBBS/BDS) பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான தகைமையுடைய மற்றும் இலங்கை மருத்துவ சபையில் (SLMC) பதிவு செய்திருத்தல்

***வயது.***- 35 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

(உ) **வழங்கும் பிரிவு (நிரந்தரக் கடற்படை)**

***பதவி.***- துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

***கல்வித் தகைமைகள்.***- இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வர்த்தக முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், வணிகம் மற்றும் கணக்கியல், பொருளியல், அரசாங்க நிர்வாகம், மதிப்பாய்வு ஆகிய பாடங்களுக்காக பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

***வயது.***- வயது 30 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

(ஊ) **கப்பல் கட்டும் பொறியியல் பிரிவு (நிரந்தரக் கடற்படை)**

***பதவி.***- லெப்டினன்ட் (ஆண்)

***கல்வித் தகைமைகள்.***- இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் (இயந்திர/உற்பத்தி/பொருள் விஞ்ஞானம்) பொறியியல் அல்லது கப்பல் நிர்மாணம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல்.

***வயது.***- 32 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

(எ) **சிவில் பொறியியலாளர் (வேலைத்தளம்) பிரிவு (நிரந்தர/ தொண்டர் கடற்படை)**

***பதவி.-*** லெப்டினன்ட் (ஆண்)

***கல்வித் தகைமைகள்.-*** இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிவில் பொறியியல் விஞ்ஞான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் (Bsc in Civil Engineering) அல்லது இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தினால் (IESL) நடாத்தப்படும் சிவில் பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான I மற்றும் II ஆம் பகுதியில் (பழைய பாடத்திட்டம்) பரீட்சை அல்லது I, II மற்றும் III ஆம் பகுதியில் (புதிய பாடத்திட்டம்) பரீட்சை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தினால் (IESL) ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தகைமைகள்.

***வயது.-*** 32 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

(ஏ) **கட்டிடக் கலைப் பிரிவு (வேலைத்தளம்) பிரிவு (நிரந்தர/ தொண்டர் கடற்படை)**

***பதவி.-*** லெப்டினன்ட் (ஆண்)

***கல்வித் தகைமைகள்.-*** மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் கட்டிடக் கலை தொடர்பான பட்டம் (BArch) பெற்றிருத்தல் அல்லது இலங்கை கட்டிடக் கலை நிறுவனத்தினால் (SLIA) நடாத்தப்படும் முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தொழில்சார் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கைக் கட்டிடக் கலை நிறுவனத்தினால் (SLIA) அங்கீகரிக்கப்பட்ட வேறு சமமான தகைமைகள்.

***வயது.-*** 32 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

(ஐ) **நிறைவேற்றுனர் பிரிவு (தொண்டர் கடற்படை)**

***பதவி.-*** பதில் கடமையாற்றும் துணை லெப்டினன்ட் (ஆண்/ பெண்)

***கல்வித் தகைமைகள்.-*** இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாவை (NDT) பூர்த்தி செய்திருத்தல் மற்றும் அரச அல்லது தனியார் துறையில் நிர்வாக/ நிறைவேற்று தரத்தில் ஒரு வருட கால அனுபவம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உயர்தர டிப்ளோமா (SLQL 4) தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் அரச அல்லது தனியார் துறையில் நிர்வாக/ நிறைவேற்று தரத்தில் 2 வருட கால அனுபவம்.

***வயது.-*** 30 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

3. ***ஏனைய தகைமைகள்.-*** விண்ணப்பதாரர்கள் இலங்கை நிரந்தர/தொண்டர் கடற்படையில் இணைந்து கொள்வதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளைக் கட்டாயமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(அ) ***குடியுரிமை.-*** இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) ***வயது.-*** 2017, திசெம்பர் மாதம் 26 ஆந் திகதியன்று வயது அந்தந்த துறையின் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

(இ) ***உயரம் (நிரந்தர).-*** ஆண் - 168 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
பெண் - 160 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

***உயரம் (தொண்டர்).-*** ஆண் - 165 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
பெண் - 157 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

(ஈ) ***உடல் எடை (நிரந்தர/ தொண்டர்).-*** ஆண் - 52 கிலோ கிராமிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
பெண் - 41 கிலோ கிராமிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

(உ) ***மார்பு (நிரந்தர/ தொண்டர்).-*** ஆண் - 81 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

(ஊ) ***பார்வை வர்ணப்பதிவு மட்டம் (நிரந்தர/ தொண்டர்).-*** எஸ்ரீஎ II (தெளிவான பார்வை)

(எ) ***தூரப்பார்வை (நிரந்தர/ தொண்டர்).-*** இரண்டு கண்களிலும் 6/ 6

* மருத்துவ/ பல் மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களுக்கு தூரப்பார்வை மூக்குக் கண்ணாடி இல்லாமல் 6/ 6 முதல் 6/ 12 வரை (மூக்குக் கண்ணாடி மூலம் சரியாக 6/ 6 ஆக இருத்தல்)

(ஏ) ***குடியியல் நிலை.-*** திருமணமானவர்/ திருமணமாகாதவர்

4. விளையாட்டுத் துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் முறையாக கவனத்தில் கொள்ளப்படும்.

5. மேற்குறித்த இரண்டாம் மூன்றாம் பந்திகளிலுள்ள தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கையில் உயரம், உடல் எடை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட அளவுகளிற்கமைய உயரம், உடல் எடை, பார்வை மட்டம் ஆகியவற்றைக் கொண்டிராதவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். விண்ணப்பதாரரின் உயரம் மற்றும் வயது உரிய அளவில் இல்லாதிருப்பினும் கடற்படைக்கு நன்மை பயக்கும் விசேட தொழிற்திறனை அவர் பெற்றிருப்பின் சேவைத் தேவைப்பாட்டிற்கமைய கடற்படைத் தளபதியின் அனுமதியுடன் அவர் குறித்து கவனம் செலுத்தப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்** :

(அ) விண்ணப்பதாரர்கள் நிரந்தர/ தொண்டர் கடற்படையின் உத்தியோகத்தர் பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்படுவதோடு அவர்கள் அடிப்படைப் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். பாடநெறியின் கால எல்லை ஆட்சேர்க்கப்படும் அவ்வந்த துறைக்கமைய மாறுபடும்.

(ஆ) பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின் படி கடற்படைத் தளபதியினால் தீர்மானிக்கப்படுவதற்கமைய இலங்கையில் எந்வொரு பிரதேசத்திலும் அல்லது வெளிநாட்டில் பயிற்சிபெறுவதற்கு நிரந்தர/ தொண்டர் கடற்படையின் உத்தியோகத்தர் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(இ) அனைத்து உத்தியோகத்தர்களும் கடமையாற்றுவதற்கு அல்லது பயிற்சி பெறுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உலகில் எந்தவொரு நாட்டிற்கும் இணைப்புச் செய்யப்படுவதற்கு கட்டுப்படல் வேண்டும்.

(ஈ) பயிற்சி பெறும் காலப்பகுதியில் மற்றும் அதன் பின்னர் நிரந்தர/ தொண்டர் உத்தியோகத்தர் கடற்படைச் சட்டத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(உ) அதிகாரத்தைப் பெறுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் ஏதேனுமொரு நிரந்தர/ தொண்டர் உத்தியோகத்தர் தமது சுய விருப்பத்திற்கமைய பயிற்சியிலிருந்து இடைவிலக வேண்டி ஏற்படின் குறித்த நிரந்தர/ தொண்டர் உத்தியோகத்தருக்காக அது வரையிலும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அனைத்தையும் குறித்த நிரந்தர/தொண்டர் உத்தியோகத்தர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளச்செலுத்துதல் வேண்டும்.

(ஊ) பயிற்சிக் காலத்தின்போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏதேனுமொரு நிரந்தர/ தொண்டர் உத்தியோகத்தரின் துர்நடத்தை காரணமாக அல்லது அவர் பொறுப்புக் கூற வேண்டிய ஏதேனுமொரு காரணத்திற்காக அவர் அதிகாரத்தை வழங்குவதற்கு பொருத்தமற்றவரென பொறுப்பிலுள்ளவர்களினால் தீர்மானிக்கப்பட்டால் அச் சந்தர்ப்பத்திலேயே குறித்த நிரந்தர/தொண்டர் உத்தியோகத்தர் அதுவரையிலும் அவருக்காக செய்த செலவுகள் அனைத்தையும் இலங்கைக் கடற்படைக்கு மீளச் செலுத்துவதற்கு ஒப்புக்கொள்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முகவரான கடற்படைத் தளபதியுடன் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்திற்கு உட்படுதல் வேண்டும்.

(எ) பயிற்சிக் காலத்தின்போது நிரந்தர/ தொண்டர் உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகத்தர் இல்லங்களில் தங்குமிட வசதிகளும் உணவுகளும் வழங்கப்படும்.

(ஏ) திருமணமாகிய உத்தியோகத்தர்களுக்கு குடிமனைகள் வெற்றாக இருப்பின் வழங்கப்படும். இதன் பொருட்டு அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையவாறு வாடகை அறவிடப்படும்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் 1956ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு தற்போது விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படும் கட்டளைகளையும் நியதிகளையும் பின்பற்றல் வேண்டும்.

8. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்**.- 2016.01.01 ஆந் திகதி முதல் இல. 03/ 2016 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம் செலுத்தப்படும்.

| விபரம் | பதில் கடமையாற்றும் துணை லெப்டினனட் ரூபா சதம் | துணை லெப்டினனட் ரூபா சதம் | லெப்டினனட் ரூபா சதம் |
|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 28,897.00 | 32,807.00 | 38,333.00 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 7,800.00 | 7,800.00 | 7,800.00 |
| சீருடை பேணுதல் கொடுப்பனவு | 255.00 | 255.00 | 255.00 |
| கடின தங்குமிட கொடுப்பனவு | 600.00 | 600.00 | 600.00 |

| விபரம் | பதில் கடமையாற்றும் துணை லெப்டினனன்ட் ரூபா சதம் | துணை லெப்டினனன்ட் ரூபா சதம் | லெப்டினனன்ட் ரூபா சதம் |
|---|---|---|---|
| கடினப்படி (யுத்தமற்ற பிரதேசங்களில்) | 1000.00 | 1000.00 | 1000.00 |
| விசேட மேலதிக கொடுப்பனவு | 3,000.00 | 3,000.00 | 3,000.00 |
| சரிசெய்தல் கொடுப்பனவு | 5,373.00 | 4,715.00 | 3,833.00 |
| உணவுக் கொடுப்பனவு | 16,138.00 | 16,138.00 | 16,138.00 |
| மொத்தம் | 63,000.00 | 67,240.00 | 71,880.00 |

(அ) சரிசெய்தல் கொடுப்பனவு இல. 03/2016 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் 2020.01.01 ஆந் திகதிக்கு முழுமையாக அடிப்படைச் சம்பளத்திற்கு சேர்க்கப்படும்.

(ஆ) உணவு எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே உணவுக் கொடுப்பனவு கிடைக்கப்பெறும்.

(இ) உரியவாறு தகைமைப்படியானது மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 செலுத்தப்படும்.

(ஈ) இலவசமாக புகையிரதத்தில் பயணிக்கக்கூடிய மூன்று சோடி புகையிரத ஆணைச்சீட்டுக்கள் ஆண்டொன்றிற்கு உரித்தாகும். (ஏற்புடையவாறு உத்தியோகத்தருக்கு, வாழ்க்கைத் துணைவிக்கு, பிள்ளைகளுக்கு மற்றும் தங்கி வாழ்பவர்களுக்கு)

(உ) முகாமில் வசிக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாதமொரு தடவை உத்தியோகத்தர் இல்லத்திலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலுத்தப்படும்.

(ஊ) சீருடையும் அதற்கான ஏனைய பொருட்களும் இலவசமாக வழங்கப்படும்.

(எ) இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (ஏற்புடையவாறு உத்தியோகத்தருக்கு, வாழ்க்கைத் துணைவிக்கு, பிள்ளைகளுக்கு மற்றும் தங்கி வாழ்பவர்களுக்கு)

(ஏ) அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 1,600.00 முதல் ரூபா 4,250.00 வரை வாடகைக் கொடுப்பனவு உரித்தாகும்.

(ஐ) மருத்துவ/பல் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு சுகாதார அமைச்சின் அங்கீகாரத்தின்படி உள்ளகப் பயிற்சி காலப்பகுதியின் பின்னர் மேலதிகக் கடமைக் கொடுப்பனவு மற்றும் 1/120 கொடுப்பனவு உரித்தாகும்.

(ஒ) பொறியியலாளர்களுக்கு அரசாங்க அங்கீகாரம் பெற்ற விசேட கொடுப்பனவுகள் உரித்தாகும்.

9. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்** :

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தில் அனைத்து பந்திகளும் கூடியவரை விரிவாக விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்படவேண்டும். விண்ணப்பங்கள் 2017, திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக "சிரேஷ்ட பதவிநிலை அதிகாரி (ஆட்சேர்ப்பு), கடற்படைத் தலைமையகம், த.பெ. இல. 593, கொழும்பு 01" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கட்டாய ஆட்சேர்ப்பு செய்தல் - நிரந்தர/தொண்டர் உத்தியோகத்தர்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். இறுதித் திகதி மற்றும் நேரத்தின் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களை www.navy.lk என்னும் இணையத்தளத்தில் அல்லது தொலைபேசி இலக்கம் 011- 2215154/011- 2215118 மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ சிவில் நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத்தின்/ கூட்டுத்தாபனத்தின்/ சபையின்/ நிறுவனத் தலைவர் ஊடாகவே அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்க முடியும் என்ற சான்றுரையையும் விண்ணப்பங்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அல்லது வேறொரு சந்தர்ப்பத்தில் அழைக்கப்படும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்போது இவ் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் அனுப்ப வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுகளுக்கான கல்வித் தகைமைகளைச் சான்றுப்படுத்தும் கல்வி/ உயர் கல்வி/ தொழில்சார் கல்வி/ பட்டச் சான்றிதழ் ;

(3) பாடசாலை விலகல் சான்றிதழ்/ நற்சான்றிதழ் ;

(4) 06 மாதத்திற்குள் பெறப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/ தொழில்நுட்பப்பயிற்சி அனுபவம் இருப்பின் அதற்கான சான்றிதழ் ;

(6) சமீபத்தில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ்கள் (இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில் தருநரிடமிருந்து) ;

(7) விளையாட்டுத் துறைகள் மற்றும் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) வேண்டப்படும் சந்தர்ப்பங்களில் குறித்த ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

(உ) வேறெந்த ஆவணங்களோ ஆவணங்களின் மூலப் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டு அவை காணாமற் போயின் அது குறித்து கடற்படை பொறுப்பேற்காது.

10. விண்ணப்பத்தில் பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டு, அது குறித்து அவ்விண்ணப்பதாரரை தெரிவு செய்வதற்கு முன்னர் வெளிப்பட்டால் அவரின் பரீட்சார்த்தத் தன்மையை நீக்குவதற்கும், தெரிவுசெய்ததன் பின்னர் வெளிப்பட்டால் அவரை பதவியிலிருந்து நீக்குவதற்கும் விண்ணப்பதாரர் கட்டுப்படுவார்.

11. **தேர்ந்தெடுத்தல்/ நேர்முகப்பரீட்சை முதலியன :**

(அ) மேற்கூறப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களுக்காக இலங்கை கடற்படையினால் நடாத்தப்படும் அடிப்படை மருத்துவ பரிசோதனையில் தேர்ச்சியடைதல் வேண்டும். அச்சோதனையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைதல் வேண்டும். உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் கடற்படைத் தளபதியினால் விதித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தல் வேண்டும். இதன் பின்னர் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுச் சபையின் நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்படுவதன் மூலம் இறுதித் தேர்வு செய்யப்படும்.

(ஆ) உடல் உறுதித் தேர்வு தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள் :

| வயது எல்லை | 800 மீற்றர் ஓட்டம் | CURL UP (2MN) | PUSH UP (2MN) |
|---|---|---|---|
| 18 -24 ஆண் | 3.30 — 5.30 நிமிடத்திற்கிடையில் | 19 அல்லது அதை விடக் கூடுதலாக | 21 அல்லது அதை விடக் கூடுதலாக |
| 18 -24 பெண் | 4 — 6 நிமிடத்திற்கிடையில் | 13 அல்லது அதை விடக் கூடுதலாக | 05 அல்லது அதைவிடக் கூடுதலாக |
| 25 - 29 ஆண் | 4— 5.30 நிமிடத்திற்கிடையில் | 19 அல்லது அதை விடக் கூடுதலாக | 20 அல்லது அதை விடக் கூடுதலாக |
| 25 - 29 பெண் | 4.30 —6.30 நிமிடத்திற்கிடையில் | 12 அல்லது அதை விடக் கூடுதலாக | 03 அல்லது அதை விடக் கூடுதலாக |
| 30 - 34 ஆண் | 4.30 — 6.30 நிமிடத்திற்கிடையில் | 15 அல்லது அதை விடக் கூடுதலாக | 14 அல்லது அதை விடக் கூடுதலாக |

| வயது எல்லை | 800 மீற்றர் ஓட்டம் | CURL UP (2MN) | PUSH UP (2MN) |
|---|---|---|---|
| 30 - 34 பெண் | 5 –7 நிமிடத்திற்கிடையில் | 09 அல்லது அதை விடக் கூடுதலாக | 02 அல்லது அதை விடக் கூடுதலாக |
| 35 - 39 ஆண் | 5 – 7 நிமிடத்திற்கிடையில் | 13 அல்லது அதை விடக் கூடுதலாக | 12 அல்லது அதை விடக் கூடுதலாக |
| 35 - 39 பெண் | 5.30 – 7.30 நிமிடத்திற்கிடையில் | 06 அல்லது அதை விடக் கூடுதலாக | 02 அல்லது அதை விடக் கூடுதலாக |

(இ) உடல் உறுதித் தேர்வில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களை மாத்திரமே அன்றைய தினமே அடிப்படை நேர்முகத் தேர்விற்கு உட்படுத்துவதோடு, அதில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே இரண்டாம் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். இரண்டாம் நேர்முகத் தேர்வில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே இறுதி நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவதோடு அத் தேர்வில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள் மற்றும் வெற்றிடங்களின் படி அவ்வந்த துறையில் அதிக புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரர்கள் மாத்திரமே அழைக்கப்படுவர்.

(ஈ) நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன விண்ணப்பதாரர்களால் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(உ) இப்பதவி தொடர்பாக விண்ணப்பதாரர் அழைக்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இறுதி நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் கடற்படை மருத்துவச்சபைக்கு சமுகமளித்தல் வேண்டும்.

(எ) விண்ணப்பதாரர் ஒருவரை சிபாரிசு செய்ய விரும்புவதாயின் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அவ்வாறு செய்யலாம். விண்ணப்பதாரர் ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகைமையற்றவராக்கும்.

(ஏ) ஆட்சேர்ப்பிற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

(ஐ) மருத்துவ/ பல் மருத்துவப் பிரிவுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தற்போது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருப்பின் அவரை தெரிவுசெய்த பின்னர் மீண்டும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்காக முழுச் சம்பளத்துடன் விடுவிப்பதோடு அதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முகவரான கடற்படைத் தளபதியுடன் ஒரு உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதோடு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்கள் தொடர்பாக சிக்கல் ஏற்பட்டால், அப்போது சிங்கள மொழிப் பிரயோகமே வலிதானதாகும்.

எஸ்எஸ் ரணசிங்ஹ, டப்டப்வீ, ஆர்டப்பீ,
யூஎஸ்பீ, என்டீசீ, பீஎஸ்சீ, ஏஓடப்சீ, பீஎஸ்சீ,
துணை அட்மிரால்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்,
த. பெ. இல. 593,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## இலங்கை நிரந்தர/ தொண்டர் கடற்படை அலுவலர்களுக்கான விண்ணப்பம்

1. தேசிய இனம் :----.

(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

2. விண்ணப்பிக்கும் துறை மற்றும் பதவி :----.
3. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையிலுள்ளபடி) :----.
4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
5. நிரந்தர முகவரி :----.
6. தற்போதைய அஞ்சல் முகவரி :----.
7. மின்னஞ்சல் முகவரி :----.
8. பிறந்த திகதி :----.
9. வயது (2017, திசெம்பர் மாதம் 26 ஆந் திகதியன்று) : வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
10. உயரம் :---- (செ.மீ). மார்பு :---- (செ.மீ). எடை :---- (கி.கி).
11. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.
12. மாவட்டம் :----.
13. தேர்தல் தொகுதி :----.
14. கிராம அலுவலர் பிரிவு :----.
15. தொலைபேசி இலக்கம் :----.
16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.
17. பால் :----.
18. கல்வி கற்ற பாடசாலை :----.
19. பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை/ பல்கலைக் கழகத்தின் பெயர் | பரீட்சையின் தன்மை | பரீட்சையின் ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த.(சா.த.)<br>க.பொ.த.(உ.த.)<br>வேறு | | |

20. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| | *முழுப்பெயர்* | *பிறந்த இடம்* | *தொழில்* | *தற்போதைய முகவரி* |
|---|---|---|---|---|
| *தந்தை* | | | | |
| *தாய்* | | | | |

22. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

23. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----. (பங்குபற்றிய போட்டிகளையும் குழுக்கள் பற்றிய விபரங்களையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளையும் தருக).

24. பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

25. ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

26. இலங்கை கடற்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்காக இதற்கு முன்பு விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

27. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா? அல்லது இடைநிறுத்தப்பட்ட சிறைத் தண்டனை பெற்றுள்ளீரா? அப்படியாயின் விபரங்கள் தருக :----.

28. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்தியவங்கி/தேசிய வங்கி/பல்கலைக்கழகங்கள்/அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

29. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :-

| *பெயர்* | *பதவிப் பெயர்* | *அஞ்சல் முகவரி* |
|---|---|---|
| | | |

30. **விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை :**
மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் அமைய சரியானவை என உண்மையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கடற்படைக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறைகளையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்துப் புரிந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

*திகதி* :----.

*11-882*

## சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

ஆயுர்வேதத் திணைக்களம்

### இலங்கை ஆயுர்வேத திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் (MN-3-3/2016) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

ஆயுர்வேதத் திணைக்களத்தின்கீழ் உள்ள நிறுவனங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆளணிப் பட்டியலில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/EST/4/1/37/1/3/2013 ஆம் இலக்க 2014.08.19 ஆந் திகதியிட்ட கடிதத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியின் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2017.12.17 ஆந் திகதியன்று பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

| பதவிகள் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|
| விவசாயப் பண்ணை முகாமையாளர் | 03 |
| விரிவாக்கல் உத்தியோகத்தர் | 02 |
| விரிவாக்கல் உத்தியோகத்தர் (தாவரவியல்) | 02 |
| விரிவாக்கல் உத்தியோகத்தர் (விவசாயம்) | 01 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 10 |
| கைத்தொழில் உத்தியோகத்தர் (கட்டடங்கள்) | 01 |

1. **சம்பளம்** :

1.1 சம்பளக் குறியீட்டு இலக்கம்.- MN3-2016

1.2 சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550.

**குறிப்பு**.- இந்தச் சம்பள அளவுத்திட்டத்துக்கு உரிய சம்பளம் 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் வழங்கப்படும் என்பதுடன் அன்றைய தினம் வரைக்கும் 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் II ஆவது அட்டவணையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

2. **ஆட்சேர்ப்புச் செய்யும் தரம்**.- III ஆந் தரம்.

3. **கல்வித் தகைமைகள்** :

(அ) கல்விப் பொதுத் தராதரம் (உயர் தரம்) பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் அனைத்துப் பாடங்களிலும் (பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ஆ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரம் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4. **தொழில்சார் தகைமைகள்** :

4.1 விவசாயப் பண்ணை முகாமையாளர் மற்றும் விரிவாக்கல் உத்தியோகத்தர்.-

(i) மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iv) மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட இரண்டாண்டு கால விவசாய டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(vi) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் I ஆவது பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

(vii) தொழிற்துறைக்கு உரியதான தேசிய தொழிற் தேர்ச்சி (NVQ 6) மட்டத்திலான தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

(viii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகள் அனைத்துக்கும் சமமானதென மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

4.2 தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் கைத்தொழில் உத்தியோகத்தர் (கட்டடங்கள்).

(i) மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் I ஆவது பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

(vi) தொழிற்துறைக்கு உரியதான தேசிய தொழிற் தேர்ச்சி (NVQ) 6 மட்டத்திலான தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகள் அனைத்துக்கும் சமமானதென மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5. **உடற் தகைமை.**- அனைத்துப் பரீட்சார்த்திகளும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமைகள் இருத்தல் வேண்டும்.

6. **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் சிறந்த குணாம்சங்களைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தினத்தன்று எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7. **வயதெல்லை :**

7.1 ***ஆகக்குறைந்த வயதெல்லை.***- 18 வயதுக்குக் குறையாத

7.2 ***ஆகக்கூடிய வயதெல்லை.***- 30 வயதுக்கு மேற்படாத

8. ***ஆட்சேர்ப்பு முறை.***- எழுத்து மூலப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளித் தேர்ச்சி ஒழுங்குமுறைக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரிசோதனை செய்யப்பட்டு தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

8.1 ***எழுத்துப் பரீட்சை :***

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைந்ததாகக் கருதப்படும் புள்ளிகள் |
|---|---|---|
| நுண்ணறிவு | 100 | 40% |
| விடயம் சார்ந்த தொழில் | 100 | 40% |
| நுட்ப பரிசோதனை | | |

8.2 ***பொதுவான நேர்முகப் பரீட்சை.***- புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் இதன்போது தகைமைகள் மாத்திரம் பரீட்சிக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைவாகத் தயாரித்த விண்ணப்பங்களை 2017.12.17 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு முன்னர் திணைக்களத்தின் தாபனப் பிரிவில் ஒப்படைத்தல் அல்லது பதிவுத்தபாலில் இந்தத் திணைக்களத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். உரிய நேரத்தின் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும்

தபாலில் காணாமல் போகின்ற விண்ணப்பங்கள் தொடர்பிலும் பொறுப்பேற்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆயுர்வேதத் திணைக்களத்தின் கண்காணிப்பு உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியைச் சேர்ந்த பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - திறந்த" எனக் குறிப்பிடல் வேண்டும். போலியான அல்லது முழுமை பெறாதவாறு அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன். (உரிய விண்ணப்பம் மற்றும் மேலதிக விபரங்களை www.ayurveda.gov.lk வெப் தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.)

எம். டீ. எம். டீ. கருணாதிலக,
ஆயுர்வேத ஆணையாளர்.

ஆயுர்வேதத் திணைக்களம்,
நாவின்ன,
மகரகம,
2017, நவெம்பர் 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுர்வேத திணைக்களத்தின் கண்காணிப்பு உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியின் ............................................... ....... பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - திறந்த**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. முழுப்பெயர் :----.

3. (i) நிரந்தர முகவரி :----.

(ii) தொலைபேசி இலக்கம் :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

5. (i) பிறந்த திகதி :----.

(ii) விண்ணப்பத்தைப் பொறுப்பெடுக்கும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

6. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சாதாரண தரம்) :

பரீட்சைச் சுட்டெண் :----, ஆண்டு :----.

| தொடர் இல. | பாடம் | தரம் | தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

* சான்றிதழ்களின் உறுதிப்படுத்திய பிரதிகளை இணைக்கவும்.

(ii) க. பொ. த. (உயர் தரம்) :

பரீட்சைச் சுட்டெண் :----, ஆண்டு :----.

| தொடர் இல. | பாடம் | தரம் | தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 3. | | |
| 2. | | | 4. | | |

* சான்றிதழ்களின் உறுதிப்படுத்திய பிரதிகளை இணைக்கவும்.

7. தொழில்சார் தகைமைகள் :

| தொ. இல. | பாடநெறியின் பெயர் | கற்ற நிறுவனம் | காலப்பகுதி |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |

*சான்றிதழ்களின் உறுதிப்படுத்திய பிரதிகளை இணைக்கவும்.

8. உரிய துறையின் அனுபவம் பற்றிய விபரங்கள் :

| தொ. இல. | அனுபவம் பெற்ற துறை | காலப்பகுதி | நிறுவனம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |

9. வேறு தகைமைகள் :----.

என்னால் இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானது என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதும் விபரங்கள் போலியானது அல்லது பிழையானது எனத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து என்னைத் தகுதியற்ற ஒருவராகக் கருதுவதற்கும் நியமிக்கப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து என்னை பணி நீக்கம் செய்ய முடியும் எனவும் நான் அறிவேன். அத்துடன் பரீட்சையை நடத்துவது தொடர்பில் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கும் நான் கீழ்படிவேன் எனவும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ................................................................ என்பவர், ......................................... ஆந் திகதி மேலே குறிப்பிடப்பட்ட கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(தயவுசெய்து உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**- அரசாங்க பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணி அல்லது அரச சேவையில் ஈடுபடுகின்ற பதவிநிலை பதவியை வகிக்கின்ற உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணபதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

11-891

## இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களம்

*சிறைக்காவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2017 (திறந்த பிரிவு)*

*இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள சிறைக்காவலர் மற்றும் பெண் சிறைக்காவலர் பதவிகளுக்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளாகிய ஆண், பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*2.* **பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையும் பதவி வெற்றிடங்களை நிரப்புதலும் :**

*2.1 வெற்றிடமாகவுள்ள சிறைக்காவலர் (ஆண்) ஆயிரத்துஅறுபத்தெட்டு (1068) மற்றும் சிறைக்காவலர் (பெண்) பதவிகளின் எண்ணிக்கை நூற்றுப்பதினாறு (116) ஆகும். இப்பதவி வெற்றிடங்களில் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து சதவீதம் (95%) திறந்த பிரிவிலிருந்தும், நூற்றுக்கு ஐந்து சதவீதம் (5%) சிறைச்சாலைகள் திணைக்களத்தில் சேவையாற்றும் விண்ணப்பகாரர்களுக்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றை நடாத்துவதன் மூலமும் நிரப்பப்படுகிறது.*

*2.2 குறித்த எண்ணிக்கையான பதவி வெற்றிடங்களை அல்லது பதவி வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்குள்ளது.*

*3.* ***பதவிக்குரிய செயற்பொறுப்பு.***- *சிறைச்சாலை நிறுவனங்களின் நிர்வாகத்திற்கு உதவுதலும் சிறையிடப்பட்டுள்ளவர்களுக்கு பாதுகாப்பளித்தலும் அவர்களின் பாதுகாப்பிற்கு உதவுதலும்.*

*4.* ***சம்பள அளவுத்திட்டம்.***- *ரூ.29,540 – 300 x 7 – 370 x 27 – ரூபா 41,630* (RS 1 - 2016) *(பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016) அறிவுறுத்தலுக்கமைய சம்பளம் வழங்கப்படும்.*

*மேற்படி சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக, மாதாந்தம் கடமைக்கேற்றபடி விசேட படிகளையும் உழைக்க முடியும்.*

5. ***அவசியமான தகைமைகள் :***

*(அ)* ***வயதெல்லை.***- *வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு பதினெட்டு (18) வயதிற்குக் குறையாதவராகவும் முப்பது (30) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.*

*(ஆ)* ***கல்வித் தகைமைகள்.***- *க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

(இ) ***உடல் தகைமைகள் :***

ஆண் விண்ணப்பதாரர்கள் -

(i) *உயரம் - ஆகக்குறைந்தது ஐந்து (05) அடி நான்கு (04) அங்குலமாக இருத்தல் வேண்டும்.*

(ii) *நெஞ்சு - உள்மூச்சு வெளியே விட்டு நெஞ்சின் சுற்றளவு முப்பத்திரண்டு (32) அங்குலமாக இருத்தல் வேண்டும்.*

பெண் விண்ணப்பதாரர்கள் :

(i) *உயரம் - ஆகக்குறைந்தது ஐந்து (05) அடி இரண்டு (02) அங்குலமாக இருத்தல் வேண்டும்.*

(ஈ) ***பிற தகைமைகள் :***

(i) *இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.*

(ii) *சிறந்த ஆரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடையவராக இருத்தல் வேண்டும்.*

(iii) *நடத்தைக்கேடு தொடர்பான ஒரு தவறு தொடர்பில் எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்றவாளியாக்கப் பட்டிருப்பது பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு ஒரு பூரண தகுதியீனமாகும்.*

(iv) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு மேலே (அ) தொடக்கம் (இ) வரையிலான தகைமைகளை விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியளவில் எல்லா விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு முறை**.- விண்ணப்பப்படிவங்களின்படி தகுதிபெறும் விண்ணப்பக்காரர்களின் அடிப்படை தகுதிகள் குறித்து ஆராய்வதற்கு சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் பரீட்சையொன்று நடாத்தப்படும் என்பதுடன், அடிப்படைத் தகுதிகள் குறித்து ஆராய்வதற்கான பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பக்காரர்கள் உடல் தகுதிக்கான பரீட்சை அன்றேல் தாக்குப்பிடிப்பதற்கான பரீட்சை, அதாவது தாங்கிக்கொள்வதற்கான சக்தியை உரசிப்பார்க்கும் கீழ்க்காணும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(i) 1000 மீற்றர் தூரம் ஓடுதல் - 03 நிமிடங்கள் 44 செக்கன்கள் (ஆண் விண்ணப்பக்காரர்களுக்கு)

(ii) பெண் விண்ணப்பக்காரர்களுக்கும் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

தகுதிக்கான பரீட்சை அன்றேல் தாக்குப்பிடிப்பதற்கான பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பக்காரர்கள் மட்டும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்காக அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்த புள்ளிகளின் திறமை கிரம ஒழுங்கின்படியும் தற்போதைய பதவி வெற்றிடங்களின்படியும் சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகிறது.

7. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை** :

| தொடர் இல. | பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள் | உச்சமட்ட புள்ளிகள் |
|---|---|---|
| 01 | மேலதிக கல்வி மற்றும் வேறு தகைமைகள் | 25 |
| 02 | தொழில் தகைமைகள் | 15 |
| 03 | விளையாட்டுத் திறமைகள் | 30 |
| 04 | தலைமைத்துவ மற்றும் சமூக சேவைகள் | 25 |
| 05 | நேர்முகப் பரீட்சையின்போது காட்டிய திறமை | 05 |
| | மொத்தம் | 100 |

8. **போலியான தகவல்களை வழங்குதல்**.- விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகக் கவனமாக, சரியான தகவல்களை வழங்க வேண்டும். பிழையான தகவல்களை வழங்கியிருப்பதாக தெரியவரின், பரீட்சைக்குத் தோற்ற முன்னர் அல்லது பரீட்சை நடைபெறுவதற்கிடையில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து நியமன அதிகாரியினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரத்துச்செய்யப்படலாம். விண்ணப்பகாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு தகவல் உண்மைக்குப் புறம்பானது என எந்தவொரு சந்தர்ப்பத்தில் தோன்றுமாயினும், அவர் பணிநீக்கம் செய்யப்படலாம்.

9. **நியமிப்பதற்கான நிபந்தனைகள்**.- இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். உங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை சம்பந்தமாக எதிர்காலத்தில் அரசினால் வெளியிடப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் அடிபணிய வேண்டும். மேலும் விதவைகள், அநாதைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்தல் வேண்டும். அரசினால் அடிக்கடி செயற்படுத்தப்படும் முறைமைகளுக்கு அமைய உங்களால் உதவித்தொகை செலுத்தப்பட வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்** :

(அ) இந்நியமனம், மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

(ஆ) நியமனம் கிடைத்து 03 மாத காலத்துள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(இ) அரசாங்க சேவை நியமனங்கள் கட்டுப்படுத்தப்படுகின்ற பொதுவான நிபந்தனைகளுக்கும் PSC/EST-02-01-18/02/2014 இலக்கமும் 2014.11.20 ஆந் திகதியும் கொண்ட கடிதம் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சிறைக்காவலர் பதவிக்காக அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் ஏற்பாடுகளும் அதற்கு செய்யப்பட்டதும் இதனகத்துப் பின்னர் செய்யப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கு உட்பட்டு சிறைக்காவலர் பதவிக்கு நியமனம் வழங்கப்படுகிறது.

(ஈ) சிறைக்காவலர் பதவிக்கு நியமன பெறுபவர்கள் நாட்டின் எந்தவொரு சிறைச்சாலை நிறுவனத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டவராவார் என்பதுடன், பயிற்சிக் காலத்தின் பின்னர் 10 வருட காலம் கட்டாயம் சிறைச்சாலைத் திணைக்களத்தில் சேவை செய்வதற்கு சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். பயிற்சிக் காலத்தினுள் பயிற்சியை விட்டு விலகிச் செல்பவர் அல்லது பயிற்சிக்குப் பின் ஒப்பந்த அடிப்படையில் குறிப்பிட்ட சேவைக் காலத்துக்கு முன் பதவியை விட்டு விலகிச் செல்பவர்கள் பயிற்சிக்குரிய சகல செலவினங்களும் மற்றும் செலவினங்களும் திணைக்களத்திற்குச் செலுத்துவதற்கு பிணைக்கப்பட்டவர்களாவர்.

(உ) சிறைக்காவலர் பதவிக்கு நியமனம் செய்யப்படுபவர்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் தனிமுறைமையான குடிமனைகளில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் தங்கியிருந்து சேவையாற்றுதல் வேண்டும்.

11. **தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைமுறை :**

(அ) உடல் தகுதி குறித்த பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பக்காரர்கள் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை கிரம ஒழுங்கின்படியும் தற்போதுள்ள பதவிவெற்றிடங்களின் எண்ணிக்கைப்படியும் சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

12. **அரசகரும மொழிக் கொள்கையை அமுலாக்கல்.**- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 2014.01.21 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின்படியும் அதனோடு உடனிகழ்வான சுற்றறிக்கைகளின்படியும், சேவைக்கு ஆட்சேர்ப்புச்செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அனைவரும் சேவையில் இணைந்துகொண்ட அரசகரும மொழிக்கு மேலதிகமாக, மற்றைய அரசகரும மொழியில் தேர்ச்சியை சேவையில் இணைந்து 05 வருட காலத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. **விண்ணப்பிக்கும் முறை :**

13.1 ***விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் :***

13.1.1 இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவ மாதிரியைத் தழுவி விண்ணப்பப் படிவத்தை தயாரித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப் படும்.

13.1.2 சாதாரண நிழற்படப் பிரதிசெய்வதற்கான (21x29 CM / 8.5" x 12" / A4) கடதாசியின் இருபக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ள வேண்டும்.

13.2 ***விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் :***

13.2.1 விண்ணப்பக்காரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.- விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசினர் பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/ சமாதான நீதவான் ஒருவர்/ சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர்/ பிரசித்த நொத்தாரிசு ஒருவர்/ முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர்/ பொலிஸ் சேவையில் செய்திநிரற்படுத்திய பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர்/ரூ. 2,40,360 அல்லது அதற்கு கூடுதலான ஆண்டுக்குரிய வேதனத்தைப் பெறுகின்ற அரசாங்க நிரந்த பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள ஒருவராயின், தாபனத் தலைவரினாலும் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

13.2.2 உரிய மாதிரிப்படிவத்திற்கு ஏற்புடையதல்லாத, பூரணமற்ற நிலையிலுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்யாமை காரணமாக ஏற்படும் இழப்பை விண்ணப்பக்காரர்களே ஏற்க வேண்டும்.

13.3 ***விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்தல் :***

13.3.1 விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சை – 2017" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

13.3.2 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2017.12.18 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் வந்தடையக்கூடியவாறு, உடல் தகுதிக்கான பரீட்சை அன்றேல் தாக்குப்பிடிப்பதற்கான பரீட்சை, அதாவது தாங்கிக்கொள்ளும் சக்தியை உரசிப்பார்ப்பதற்கான பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியான சிறைச்சாலையின் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். சிறைச்சாலை நிறுவனங்களின் முகவரிகளின் பட்டியலை அட்டவணை I இல் காணலாம். சிறைச்சாலை தலைமையகம் அல்லது அட்டவணை இல. 1 இல் குறிப்பிடப்படாத வேறு நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

13.3.3 தபாலில் காணாமல்போகும் அல்லது 2017.12.18 ஆந் திகதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் குறித்த முறைப்பாடுகள் எவையும் ஏற்கப்பட மாட்டா.

14. இதனகத்துக் குறிப்பிடப்படாத வேறேதேனும் ஒரு விடயம் இருக்குமாயின், அது சம்பந்தமாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் முடிவெடுக்கப்படும். விண்ணப்பகாரர்கள் யாவரும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்டதிட்டங்களுக்கு அமையவும் இவ்வறிவித்தலில் அடங்கியிருக்கும் நிபந்தனைகளுக்கு அமையவும் செயலாற்றுவதற்கு பிணைக்கப்பட்டுள்ளனர்.

15. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைகளுக்கும் அழைக்கப்படும் விண்ணப்பகாரர்களுக்கு பிரயாணச் செலவுகள் அல்லது ஏனைய செலவுகள் எவையும் வழங்கப்பட மாட்டா.

எம். எம். என். சி. தனசிங்க,
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்.

சிறைச்சாலைத் தலைமையகம்,
இல.150, பேஸ்லைன் வீதி,
கொழும்பு 09,
2017, நவெம்பர் 12.

**அட்டவணை 1**

| தொ. இல. | மாவட்டம் | சிறைச்சாலை நிறுவனம் | சிறைச்சாலை நிறுவனத்தின் முகவரி |
|---|---|---|---|
| 01. | கொழும்பு | சிறைச்சாலை ஆராய்ச்சி மற்றும் சீர்த்திருத்த பயிற்சி நிலையம், பேஸ்லைன் வீதி, கொழும்பு 09. | உதவிச் சிறைச்சாலைகள் அத்தியட்சகர், ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையம், பேஸ்லைன் வீதி, கொழும்ப 09. |
| 02. | கம்பஹா | மஹர சிறைச்சாலை | சிறைச்சாலைகள் அத்தியட்சகர், மஹர சிறைச்சாலை, ராகம. |
| 03. | களுத்துறை | களுத்துறை சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சர், களுத்துறை சிறைச்சாலை, களுத்துறை |
| 04. | மாத்தளை | பல்லேகெலே திறந்தவெளி சிறை முகாம் | சிறைச்சாலைகள் அத்தியட்சகர், பல்லேகெலே திந்த வெளி சிறை முகாம், பல்லேகெலே, குண்டசாலை. |
| 05. | கண்டி | போகம்பறை சிறைச்சாலை | சிறைச்சாலைகள் அத்தியட்சகர், போகம்பறை சிறைச்சாலை, தும்பறை, பல்லேகெலே, குண்டசாலை. |

| தொ. இல. | மாவட்டம் | சிறைச்சாலை நிறுவனம் | சிறைச்சாலை நிறுவனத்தின் முகவரி |
|---|---|---|---|
| 06. | நுவரெலியா | தல்தென இளந்தவறாளிகள்-<br>சீர்திருத்த நிலையம் | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>தல்தென இளந்தவறாளிகள்,<br>சீர்திருத்தி நிலையம்,<br>தல்தென. |
| 07. | காலி | காலி சிறைச்சாலை | உதவிச் சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>காலி சிறைச்சாலை,<br>காலி. |
| 08. | மாத்தறை | மாத்தறை சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>மாத்தறை சிறைச்சாலை,<br>மாத்தறை. |
| 09. | அம்பாந்தோட்டை | தங்காலை சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>தங்காலை சிறைச்சாலை,<br>தங்காலை. |
| 10. | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் மறியற்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>யாழ்ப்பாணம் மறியற்சாலை,<br>யாழ்ப்பாணம். |
| 11. | முல்லைத்தீவு | வவுனியா மறியற்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>வவுனியா மறியற்சாலை,<br>வவுனியா. |
| 12. | கிளிநொச்சி | வவுனியா மறியற்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>வவுனியா மறியற்சாலை,<br>வவுனியா. |
| 13. | வவுனியா | வவுனியா மறியற்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>வவுனியா மறியற்சாலை,<br>வவுனியா. |
| 14. | திருகோணமலை | திருகோணமலை மறியற்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>திருகோணமலை மறியற்சாலை,<br>திருகோணமலை. |
| 15. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>மட்டக்களப்பு சிறைச்சாலை,<br>மட்டக்களப்பு. |
| 16. | அம்பாறை | மொணராகலை சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>மொணராகலை சிறைச்சாலை,<br>மொணராகலை. |
| 17. | புத்தளம் | நீர்கொழும்பு சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>நீர்கொழும்பு சிறைச்சாலை,<br>நீர்கொழும்பு. |
| 18. | குருநாகல் | வாரியப்பொல சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>வாரியப்பொல சிறைச்சாலை,<br>வாரியப்பொல. |

| தொ. இல. | மாவட்டம் | சிறைச்சாலை நிறுவனம் | சிறைச்சாலை நிறுவனத்தின் முகவரி |
|---|---|---|---|
| 19. | அநுராதபுரம் | அநுராதபுரம் சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>அநுராதபுரம் சிறைச்சாலை,<br>அநுராதபுரம். |
| 20. | பொலநறுவை | பொலநறுவை மறியற்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>பொலநறுவை மறியற்சாலை,<br>பொலனறுவை. |
| 21. | பதுளை | பதுளை சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>பதுளை சிறைச்சாலை,<br>பதுளை. |
| 22. | மொணராகலை | மொணராகலை சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>மொணராகலை சிறைச்சாலை,<br>மொணராகலை. |
| 23. | கேகாலை | கேகாலை மறியற்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>கேகாலை மறியற்சாலை,<br>கேகாலை. |
| 24. | இரத்தினபுரி | குறுவிற்ற சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>குருவிற்ற சிறைச்சாலை,<br>குருவிற்ற. |
| 25. | மன்னார் | வவுனியா மறியற்சாலை | உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர்,<br>வவுனியா மறியற்சாலை,<br>வவுனியா. |

[ ]
(அலுவலகப் பாவனைக்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தில் சிறைக்காவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2017**

திறந்த பிரிவு

1. (அ) முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (உதாரணம்: GENAWARDHANA, M.G.B.S.K.)
   (ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (இ) முழுப்பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :----.

2. (அ) நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) :----.
   (ஆ) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (இ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும் மாவட்டமும் :----.

3. பால் நிலை :

பெண் - 1 ஆண் - 0 [ ]
(உரிய இலக்கத்தை கூண்டினுள் எழுதவும்.)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | ]

5. விவாக நிலை :

திருமணமாகாதவர் - 1 திருமணமானவர் - 2 ☐
(உரிய இலக்கத்தை கூண்டினுள் எழுதவும்.)

6. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

7. விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு வயது (2017.12.18) :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

8. பிரசாவுரிமை : (பரம்பரை வழியாகவா / பதிவின் மூலமா) :----.

9. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

10. உடல் அளவுகள் :
உயரம் : ................. அடி ................... அங்குலம்.
நெஞ்சு : ................ அங்குலம்.
(பெண் விண்ணப்பதாரர்கள் உயரத்தை மட்டும் குறிப்பிடவும்.) :----.

11. கல்வித் தகைமைகள் :

க.பொ.த. (சாதாரண தரம்) - முதல் அமர்வு :
(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சைப் பெறுபேறுகள் :

க.பொ.த. (சாதாரண தரம்) - இரண்டாம் அமர்வு :
(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சைப் பெறுபேறுகள் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

12. பிற தகைமைகள் :----.

13. தாங்கள் எப்பொழுதாவது நீதிமன்றம் ஒன்றின்மூலம் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அது குறித்த முழு விபரம் :----.

14. **விண்ணப்பகாரரின் உறுதியுரை** :

(i) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனும் பகுதிகளை பூர்த்திசெய்யாமை அத்துடன்/அல்லது சரியான முறையில் பூர்த்திசெய்யப்படாததன் மூலம் அத்துடன்/அல்லது பிழையாகப் பூர்த்திசெய்வதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்பை ஏற்றுக்கொள்ள உடன்படுகின்றேன். மேலும், இதனகத்துள்ள சகல பிரிவுகளையும் சரியான முறையில் பூர்த்தி செய்துள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) என்னால் செய்யப்பட்ட இவ்வெளிப்படுத்தல் உண்மைக்குப் புறம்பானது என நிரூபிக்கப்படுமாயின், நியமிக்கப்பட முன்னர் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்ட பின்னர் பணிநீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(iii) விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்ய முன்னர் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் சகல விடயங்களையும் மிக நன்றாக வாசித்து விளங்கிக்கொண்டேன் என்பதையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களுடனும் நிபந்தனைகளுடனும் நான் உடன்படுகின்றேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

15. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................... என்பவரை தனிப்பட்ட முறையில் நான் அறிவேன் என்பதையும் அவர் என் முன்னிலையில் .................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினை மூலம் அத்தாட்சிப்படுத்தவும்.)

16. திணைக்கள அல்லது தாபனத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தல் :

திரு./திருமதி/செல்வி .................................................................................... என்பவர் இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளார் என்பதையும், விண்ணப்பிப்பதற்கு தகுதிபெற்றுள்ளார் என்பதையும், இப்பதவிக்கு உரிய அறிவித்தலின் பிரகாரம் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதையும், அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஏற்புடையதல்லாத சொற்களைக் கீறி விடவும்)

----,
திணைக்கள அல்லது தாபனத் தலைவரின்
கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினை மூலம் அத்தாட்சிப்படுத்தவும்.)

11-1158

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு**

*அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்*

*அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவைக்குரிய அளவீட்டு சேவை சாதனங்களின் பயிலுனர் பரிசோதகர்கள் மட்டுப்படுத்தப்பட்ட பதவிகளுக்கும் ஆய்வுகூட பயிலுனர் உதவியாளர்கள் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2017*

Limited Competitive Examination for the Recruitment to the Trainee Grade of the Posts of Inspectors of Measurement Services Devices and Lab Assistant of the Sri Lanka Technological Service of Department of Measurement Units Standards and Services - 2017

அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் திணைக்களத்தின், இலங்கைத் தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த III ஆம் தர அளவீட்டு சேவை சாதனங்களின் பரிசோதகர்கள் பதவிகளுக்கும் ஆய்வுகூட உதவியாளர் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புச்செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2017.12.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் 'பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை' என்னும் முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அளவீட்டு சேவை சாதனங்களின் பரிசோதகர்கள் பதவி /ஆய்வுகூட உதவியாளர் பதவி" எனக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.

1. **சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள், அநாதைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும் ;

(ii) இப்பதவி இரண்டு வருட காலத்திற்குத் தகுதிகாண் காலத்தைக் கொண்டிருக்கும் ;

(iii) அரச கரும மொழிக் கொள்கைகளுக்கு அமைய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/ 2007 இன்படி குறித்த காலப்பகுதிக்குள் அரசகரும மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(iv) பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையும், II ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று 03 வருடங்களுக்குள் இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையும் I ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று 05 வருடங்களுக்குள் மூன்றாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும்.

2. **சம்பளமும் கொடுப்பனவும்.**- பயிலுனர் விண்ணப்பதாரிகளுக்கான தகுதிகளைக்கொண்ட அலுவலர்கள் பயிற்சி காலத்தில் தாங்கள் முதல் பெற்ற சம்பள அளவுத்திட்டத்தையே பெற்றுக்கொள்வார்கள் எனவும் பயிற்சித் திட்டத்தின் இறுதியில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் திறன்காணும் பரீட்சையில் சித்தியடைந்தால் இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய வகுப்பிற்கான வருடாந்த படியேற்றத்திற்கு சமமான வருடாந்த கொடுப்பனவு சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும்.

**மாதாந்த சம்பளக் கொடுப்பனவு.**- அளவீட்டு சேவை சாதனங்களின் பரிசோதகர்கள்/ ஆய்வுகூட உதவியாளர்கள்
1 ஆம் வருடம் - ரூபா 15,924 மாதாந்தப் படி
2 ஆம் வருடம் - ரூபா 16,100 மாதாந்தப் படி

பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம்.- மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 3/2016 ஆம் இலக்க பொது நிருவாக பதவிக்கான சுற்றறிக்கையின் பிரகாரம் கீழ் MN 3 - 2016 ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550.00ஆகும். குறித்த சம்பளம் 2020.01.01ஆந் திகதி முதல் செல்லுபடியாகும். அச்சுற்றுநிருபத்தின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் வழங்கப்படும் திகதியிலிருந்து சம்பளம் செலுத்தப்படும்.

3. **கல்வித் தகைமைகள் :**

(i) ***அளவீட்டுச்சேவை சாதனங்களின் பரிசோதகர் பதவி.***- க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு மொழி, கணிதம், மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட 06 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

***தொழில் சார்ந்த தகுதிகள்*** - விண்ணப்பிக்க பொருத்தமற்றது.

4. **அனுபவம்**.- (i) ***அளவீட்டுச்சேவை சாதனங்களின் பரிசோதகர் பதவி :-***

அளவைகள் திருத்துனராக பத்து வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்தவராகயிருத்தல் வேண்டும் அல்லது தொழில்நுட்பவியலாளராக பத்து வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்தவராகயிருத்தல் வேண்டும்; அல்லது அளவீட்டு பணியாளராக சேவைக்காலத்தை பூர்த்தி செய்தவராகயிருத்தல் வேண்டும்.

(ii) ***ஆய்வுகூட பயிலுனர் உதவியாளர் பதவி***.- அளவைகள் திருத்துனராக பத்து வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்தவராகயிருத்தல் வேண்டும். அல்லது தொழில்நுட்பவியலாளராக பத்து வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்தவராகயிருத்தல் வேண்டும். அல்லது அளவீட்டு பணியாளராக சேவைக்காலத்தை பூர்த்தி செய்தவராகயிருத்தல் வேண்டும். அல்லது ஆய்வுகூட உதவியாளராக பத்து வருட அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

5. **ஏனைய தகைமைகள்** .-

(i) விண்ணப்ப முடிவுத் திகதியன்று முன்னுள்ள 5 வருட காலப்பகுதியில் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(ii) கட்டாயமாக பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருக்க வேண்டும்;

(iii) நல்ல ஒழுக்கமும் தேக ஆரோக்கியமும் கொண்டிருத்தல் வேண்டும்;

(iv) விண்ணப்ப முடிவுத் திகதியன்று மேற்குறிப்பிட்ட எல்லா தகுதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறை**.- மேற்குறிப்பிட்ட எல்லா தகுதிகளையும் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரி பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

பயிற்சிக்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் எழுத்து மற்றும் நடைமுறை பயிற்சிகளுக்கு பிறகு திணைக்களத்தினால் நடாத்தப்படும் திறன்காணும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். திறன்காணும் பரீட்சையில் சித்தயடைபவர்கள் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் (III) வகுப்பிற்கு உள்ளீர்க்கப்படுவார்கள்.

அளவீட்டு சேவை சாதனங்களின் பரிசோதகர்களின் எழுத்துப் பரீட்சை :

| பாடம் | அதிகபட்ச புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி | கால எல்லை |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40% | 01 மணித்தியாலம் |
| தொழில்நுட்ப மற்றும் கோட்பாட்டுப் பரீட்சை | 100 | 40% | 01 மணித்தியாலம் |

ஆய்வுகூட பயிலுனர் உதவியாளர்களின் எழுத்துப் பரீட்சை

| பாடம் | அதிகபட்ச புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி | கால எல்லை |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40% | 01 மணித்தியாலம் |
| தொழில்நுட்ப மற்றும் கோட்பாட்டுப் பரீட்சை | 100 | 40% | 01 மணித்தியாலம் |

பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற வேண்டும். அவ்வாறு ஆகக்கூடிய புள்ளிகளைப்பெறும் பரீட்சார்த்திகளின் மொத்த தேர்ச்சிப் புள்ளிகளின் ஒழுங்கிற்கு அமைய ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்க்கும் அளவைவிட இருமடங்கு பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் பட்டியல் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கு அளவீட்டு அலகுகள், நியமங்கள் , சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகப்பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தகைமைகளைப் பூர்த்தி செய்த, இரண்டு பாட விடயங்களுக்கும் மொத்தமாக உயர்ந்த புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் பயிற்சி வகுப்பில் அனுமதிக்கப்படுவார்.

பரீட்சையில் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் அவர்களுடைய பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தனித்தனியாக அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தினூடாக அறிவிக்கப்படும். பரீட்சையை நடத்துவதும், பெறுபேறுகளை வெளியிடுவதும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும். அவருடைய முடிவு இறுதி முடிவாகும்.

7. **எழுத்துப் பரீட்சை**.- பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பிக்கும் பரீட்சையின் மொழியை மாற்றுவதற்கு பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தான் விண்ணப்பித்த மொழியிலேயே விடையளிக்க வேண்டும்.

அளவீட்டு சேவை சாதனங்களின் பரிசோதகர்கள்.- பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :

(i) நுண்ணறிவுப் பரீட்சை.- (நேரம் : 1 மணித்தியாலம்) மொத்தப் புள்ளிகள் - 100.

பரீட்சார்த்தியின் தர்க்கவியல் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு ஆற்றல், தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல் என்பவற்றை மதிப்பாய்வு செய்வதற்குப் பல்தேர்வு வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை அளிக்கக் கூடிய வகையில் 50 வினாக்கள் கொண்டதாக இருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(ii) தொழில்நுட்ப மற்றும் கோட்பாடு ரீதியான வினாப்பத்திரம்.- (நேரம் : 1 மணித்தியாலம்) மொத்தப் புள்ளிகள் - 100

அளவீட்டு உபகரணம் மற்றும் தொடர்பான அடிப்படை அறிவு :

(அ) தத்துவங்கள், (ஆ) செயற்பாடு, (இ) நடைமுறை பயன்பாடு மற்றும் (ஈ) திணைக்களம் தொடர்புடைய கட்டுப்பாடு

அளவீட்டு அளவைகள் தொடர்பான அடிப்படை அறிவு :

(அ) சர்வதேச நிலையான அலகு (ஆ) வகையீடு (இ) பல்வேறு அளவீட்டு தொகுப்பிற்காக உபயோகிக்கப்படும் அலகுகள்

ஆய்வுகூட பயிலுனர் உதவியாளர்கள் :

(i) நுண்ணறிவுப் பரீட்சை.- (நேரம் : 1 மணித்தியாலம்) மொத்தப் புள்ளிகள் - 100.

பரீட்சார்த்தியின் தர்க்கவியல், சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு ஆற்றல், தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல் என்பவற்றை மதிப்பாய்வு செய்வதற்குப் பல்தேர்வு வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை அளிக்கக் கூடிய வகையில் 50 வினாக்கள் கொண்டதாக இருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(ii) தொழில்நுட்ப மற்றும் கோட்பாடு ரீதியான வினாப்பத்திரம் : (நேரம் : 1 மணித்தியாலம்) மொத்தப் புள்ளி 100

தேசிய அளவீட்டு ஆய்வுகூட கூடத்தில் உபகரண உபயோகம் தொடர்பான அடிப்படை அறிவு :

(அ) தத்துவங்கள், (ஆ) செயற்பாடு, (இ) நடைமுறை பயன்பாடு மற்றும் (ஈ) உபகரண பராமரிப்பும் உபயோக முறையும்

அளவீட்டு அளவைகள் தொடர்பான அடிப்படை அறிவு :

(அ) சர்வதேச நிலையான அலகு (ஆ) வகையீடு (இ) பல்வேறு அளவீட்டு தொகுப்பிற்காக உபயோகிக்கப்படும் அலகுகள்

ஆய்வுகூடத்தை பராமரிப்பதற்கான சூழலின் நிலைப்பற்றிய அறிவு :

(அ) வெப்பநிலை (ஆ) சாரீரப்பதன் (இ) வளிமண்டலத்தின் தரம்

8. **விண்ணப்பப்படிவங்களும், விண்ணப்பிக்க வேண்டிய முறையும்.**- விண்ணப்பப்படிவங்களின் தலைப்பு இலக்கம் 01 முதல் 09 வரை முதலாம் பக்கத்திலும், 10 முதல் 15 வரை இரண்டாம் பக்கத்திலும், எஞ்சியவை மூன்றாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட தகவல்களை உங்கள் கையெழுத்து மூலம் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு பொருந்தாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள், எதுவித முன்னறிவித்தலுமின்றி புறக்கணிக்கப்படும். குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியை தம் வசம் வைத்திருப்பது விண்ணப்பதாரிக்கு பிரயோனசமுள்ளதாக அமையும். அதேசமயம் விண்ணப்பப் படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிட்ட இரு பதவிகளுக்கும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாக இருப்பின் இரண்டிற்கும் விண்ணப்பிக்கலாம். தகைமைகளுக்கு ஏற்ப நியமனத்தில் கிடைக்கவிரும்பும் அல்லது உங்களின் விருப்பத்திற்குறிய பதவிக்கு 1 எனவும் இரண்டாவது விருப்பத்திற்குரிய பதவிக்கு 2 எனவும் குறிப்பிடவும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

09. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முடிவின் அடிப்படையில், முறையாக பரீட்சைக் கட்டணம் செலுத்தி, குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பபடிவங்களை அனுப்பி வைத்திருக்கும் விண்ணப்பதாரிகள் சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதியட்டை விநியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைத்த பின்னர் உடனடியாக அதை அறிவிக்கும் முகமாக பத்திரிகை விளம்பரம் ஒன்று வெளியிடப்படும். அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் சான்றுப்படுத்திய போட்டோப் பிரதி மற்றும் பரீட்சை பற்றுச்சீட்டு, பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு மற்றும் பரீட்சார்த்தி கொழும்புக்கு வெளியே இருப்பாராயின் அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்கான பெக்ஸ் இலக்கம் ஆகியவற்றையும் அனுப்பி வைப்பது பயனுள்ளதாகும்.

10 பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னர் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏதேனும் நிறுவனத்தில் பணிபுரியும் விண்ணப்பதாரி அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை நிறுவனத்தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறற்ற ஏனைய விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர், ஓய்வு பெற்ற அதிபர், பிரிவிற்குரிய கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையை சேர்ந்த அதிகாரி ரூபா 240,360 அல்லது அதற்கு மேலான வருடாந்த இணைந்த சம்பள அளவுத்திட்டத்தை பெறும் அரச அல்லது மாகாண அரச சேவை அல்லது நிரந்தர பதவியணி அதிகாரி பௌத்த விகாரைத் தலைவர் அல்லது நாயக்கத்தேரோ அல்லது வேறு மதங்களைச் சேர்ந்த மத நிலையமொன்றில் ஏற்றுக்கெகாள்ளக்கூடிய தரத்தைச்சேர்ந்த ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

பரீட்சைக்குத்தோற்றும் முதல் சந்தர்ப்பத்திலேயே பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக்கொண்ட பிரவேசப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

11. ஒரு பதவிக்கான பரீட்சைக்கட்டணம் 1,000 ரூபாவாகும். இரண்டு பதவிகளுக்காகவும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1,300 செலுத்த வேண்டும். இத்தொகையை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 என்ற வருமானத் தலைப்பின் கீழ் அரசாங்கத்தின் வருமானத்தில் வரவு வைக்கப்படும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அல்லது உபதபால் நிலையத்தில் பணம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்ட வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எவ்விதமான கட்டணமும் அறவிடப்படாது என தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன். பரீட்சைக் கட்டணம் தொடர்பில் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. செலுத்தப்பட்ட பரீட்சை கட்டணம் எந்வொரு காரணத்திற்காகவும் திருப்பி செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையொன்றிற்காக மாற்றப்படவோ முடியாது என்பதுடன் பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தங்களிடம் வைத்திருப்பது பயன்படும்.

12. இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடாத்தும் பரீட்சைகளின்போது, பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதி அட்டையை வழங்கிய ஒரே காரணத்தினால் மேற்படி பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முழுமையான தகைமைகளையும் பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

பரீட்சைகள் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பிறப்பிக்கும் சகல சட்ட திட்டங்களுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர். மேற்படி சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விதிக்கும் தண்டனைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்கள் ஆவார்.

13. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாகத் தீர்மானிக்கும் அதிகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களப் பணிப்பாளரிற்கு மாத்திரமே உண்டு. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்ட இவ்வறிவித்தலில் ஏதாவது முன்பின் முரணாக இருப்பின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தலே வலுவாக்கம் பெறும்.

எஸ். என். அகுரண்திலக,
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களப் பணிப்பாளர்.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்,
மாஹேனவத்த,
பிடிபன,
ஹோமாகம.
2017.10.27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவைக்குரிய அளவீட்டு சேவை சாதனங்களின் பயிலுனர் பரிசோதகர்கள் பதவிகளுக்கும் பயிலுனர் ஆய்வுகூட உதவியாளர்கள் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

Open Competitive Examination for the Recruitment to the Trainee Grade of the Posts of Inspectors of Measurement Services Devices and Lab Assistant of the Sri Lanka Technological Service of Department of Measurement Units, Standards and Services - 2017

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :

*சிங்களம் - 2*
*தமிழ் - 3*
*ஆங்கிலம் - 4*

*(சரியான இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)*

விண்ணப்பிக்கும் பதவி :

*(சரியான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)*

*அளவீட்டுச்சேவை சாதனங்களின் பரிசோதகர் பதவிக்கான இலக்கம் 01, ஆய்வுகூட உதவியாளர் பதவிக்கான இலக்கம் 02, இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் இலக்கம் 03 ஐக் குறிப்பிடுக. (பரீட்சை பற்றிய அறிவித்தலின் 08 ஆம் பந்திக்கு அமைய).*

*இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் நியமனத்தின் விருப்பத்திற்கேற்ப அதற்குரிய பதவிக்கு முன் 1 மற்றும் 2 என இலக்கமிடுக.*

*அளவீட்டு சேவை சாதனங்களின் பயிலுனர் பரிசோதகர்*

*பயிலுனர் ஆய்வுகூட உதவியாளர்*

1. *முதலெழுத்துக்களுடன் பெயர் (பெரிய ஆங்கில எழுத்துக்களில்):*
   *(உ-ம் -* NIMAL, A.B.). ……………………………………………………………..

2. *முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (பெரிய ஆங்கில எழுத்துக்களில்)* ………………………
   ………………… ……………………………….

3. *முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்)* ………………………………………………

4. *நிரந்தர முகவரி (பெரிய ஆங்கில எழுத்துக்களில்) : பரீட்சை பிரவேசப் பத்திரம் இம்முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும்* ………………………………………………

5. *பால் :*
   *(ஆண் - 0, பெண் - 1)*

*(குறிப்பிட்ட இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)*

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

7. திருமணமானவரா/ திருமணமாகாதவரா ?
(திருமணமானவர் - 1, திருமணமாகாதவர் - 2) [ ]
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

8. தேசிய இனம் :
(சிங்களவர் -1, தமிழர் -2, இந்தியத் தமிழர் -3,
முஸ்லிம் - 4, ஏனையோர் - 5) [ ]
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

9. (அ) பிறந்த திகதி :-

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியின்போது வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

10. நீங்கள் பிறப்பின் மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கை பிரஜையா எனக்குறிப்பிடுக. (பதிவின் மூலமாயின் விபரங்களைத் தருக.)

11. கல்விசார்/ தொழில்சார் தகைமைகள் :

11.1 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சை :

பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு ................................

பரீட்சைச் சுட்டெண் ................................

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |

11.2 க.பொ.த. (உயர் தரப்) பரீட்சை :
பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு :- ..............................
பரீட்சைச் சுட்டெண் :- ...............................................

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

12. தற்போதைய தொழில் மற்றும் முன்னர் பதவி வகித்திருந்தால் அதுபற்றிய விபரங்கள் :

| பதவி | இருந்து | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

13. நீங்கள் ஓர் அரச பதவியை வகித்து அதில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டீர்களா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடுக.) ..........................................................................................................

14. உங்களுக்கு எதிராக (ஏற்கனவே அரச சேவையில் ஈடுபட்டிருப்பின்) திணைக்களத்தில் ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? ...............................................................................................

15. ஏனைய வேறு தகவல்கள் :.............................................................................................................
..........................................................................................................................

16. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் நிலையம் :.....................................................................

பற்றுச்சீட்டு இலக்கம் :.......................................................................................

திகதி :...............................................................................

| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு கழறாத வகையில் இங்கு ஒட்டவும். |
|---|

17. பரீட்சார்த்தியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானதெனவும், சரியானதெனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் ................ மற்றும் ................ ஆந் திகதியிடப்பட்ட பற்றுச்சீட்டு இத்துடன் ஒட்டப்பட்டுள்ளதென உறுதிமொழிகிறேன். மேலும் பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயற்படவும், இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைய நான் தகைமையற்றவன் எனக் கருதப்பட்டால் பரீட்சைக்கு முன்பாக அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அல்லது பரீட்சையின் பின்னர் எனது விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகிறேன். மேலும் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் ஏதாவது தகவல் அல்லது விபரம் பொய்யானதெனக் கண்டறியப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். அதே சமயம் பரீட்சை நடத்துவது பற்றி பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கும் ஒழுங்குவிதிகளுக்கும், பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பதற்கு இணங்குவேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

..............................,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :........................

18. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :-
மேல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையெனவும்/ பின்வருமாறு அவை திருத்தப்பட வேண்டுமெனவும், குறித்த கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் விண்ணப்பதாரியின் பணிகளும் நடத்தையும் .............................. எனவும் நான் சான்றுப்படுத்துகிறேன். தற்போது விண்ணப்பதாரி வகிக்கும் பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது.

................................,
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பதவி :-.......................................
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்)
திகதி :-......................................

11-728

## காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

*காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் III ஆம் தர குடியேற்ற அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2016 (2017)*

*காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் குடியேற்ற அலுவலர் தரம் III இல் நிலவுகின்ற பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்பும் நோக்குடன் கீழே 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள்க கோரப்படுகின்றன. இது தொடர்பான திறந்த போட்டிப் பரீட்சை 2018 ஆம் ஆண்டில் பங்குனி மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.*

*1. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை**.- இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் குடியேற்ற அலுவலர் தரம் III இல் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 70% இற்கு அதிகரிக்காத வெற்றிடங்கள், கீழே 2 இல் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளை எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி அவற்றின் பெறுபேறுகளுக்கு அமைய அரச சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள காணி ஆணையாளர் நாயகத்தினால் நிரப்பப்படும்.*

*2. **தகைமைகள்** :*

(i) ***கல்வித் தகைமைகள்.*** *– க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல் மற்றும் விவசாய விஞ்ஞானம் மற்றும் விவசாயத் தொழில்நுட்பம் உள்ளிட்ட 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் ;*

*மற்றும்*

*கல்விப் பொதுத் தராதரம் (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல்;*

(ii) ***தொழில்சார் தகைமைகள்.*** *– மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட இரண்டு வருட விவசாய டிப்ளோமா பெற்றிருத்தல்.*

*3. **சம்பள அளவுத்திட்டம் மற்றும் பிரிவு**.- இந்தப் பதவிக்கான மாதாந்த இணைந்த சம்பள அளவுத்திட்டம் – ரூபா 31,040 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10 x 750 – ரூபா 57,550. சம்பள அளவு இலக்கம் -* MN-3-2016 *(அட்டவணை இலக்கம் 1 இற்கு அமைய).*

*4. **வயதெல்லை**.- விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (இதன் பிரகாரம் 1999.12.08 ஆந் திகதி அல்லது இத்திகதிக்கு முன் மற்றும் 1987.12.08 ஆந் திகதி அல்லது இத்திகதிக்குப் பின் தங்களுடைய பிறந்த தினங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே, இப்பதவிக்கான பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகைமை உடையவர் ஆவர்.)*

5. **உடல் ரீதியான தகைமைகள் மற்றும் ஏனைய சேவை நிபந்தனைகள்** :

*(அ) அனைத்து விண்ணப்பதாரர்களும் சிறந்த நல்லொழுக்கம் உடையவர்களாகவும் நல்ல தேகாரோக்கிய நிலையில் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும் ;*

*(ஆ) இலங்கையில் எப்பாகத்திலும் பணிபுரிவதற்குக் கடப்பாடுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;*

*(இ) இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் அமைப்பு விதிகளுக்கு ஏற்றவாறு விதிக்கப்படுகின்ற மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும் ;*

*(ஈ) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும். அத்துடன் இப்பதவி 03 வருட காலத் தகுதிகாண் நிலைக்கு உட்பட்டிருக்கும்.*

**6. பரீட்சை முறை :**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும் ;

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தான் தகைமை பெற்றுள்ள பரீட்சையில் சித்தி அடைந்த மொழி மூலமாகவோ அரச கரும மொழியிலோ பரீட்சை எழுதுதல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) மேலே தரப்பட்டுள்ள, "தகைமை பெற்றுள்ள பரீட்சை" எனும் சொற்பிரயோகம், 02 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளில் ஒன்றைக் குறிக்கின்றது ;

(ii) பரீட்சைகள் பரீட்சையில் அனைத்து வினாப்பத்திரங்களிலும் ஒரே மொழியில் விடைகள் எழுதுதல் வேண்டும் ;

(iii) தங்களுடைய விண்ணப்பப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை மாற்றுவதற்கும் பரீட்சார்த்திகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**7. எழுத்துப் பரீட்சையின் பாட விதானம் :**

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாட விதானம் |
|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், அவருடைய கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்து தீர்மானம் மேற்கொள்ளும் திறன் மற்றும் தீர்வுகள் கண்டுகொள்ளும் அறிவு ஆகிய தன்மைகளைப் பரீட்சிக்கும் வண்ணம், பல்தேர்வு மற்றும் குறுகிய விடைகள் எழுதும் பாணியில் 50 வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடைகள் எழுத வேண்டும் (காலம் : 1 மணித்தியாலம்). |
| 2. தொழில்நுட்ப வியல் வினாப் பத்திரம் | இலங்கையின் காணி ஆட்சி முறை மற்றும் அதன் வளர்ச்சி, இலங்கையின் காணி சீரமைப் புத் திட்டம், இலங்கையின் விவசாயப் பொருளாதாரம் மற்றும் குடியேற்றத் திட்டங்கள் மற்றும் முகாமைத்துவம் தொடர்புடைய கட்டமைப்பில் அமைந்த கட்டுரை வடிவில் ஆன வினாப்பத்திரம். கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்கள் சம்பந்தப்பட்ட நல்ல தெளிவான நேரடி விளக்கம், பரீட்சார்த்திகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. அனைத்து வினாக்களுக்கும் விடைகள் எழுத வேண்டும். (காலம் : 3 மணித்தியாலம்) :<br>(i) இலங்கையில் காணி ஆட்சி முறைமை மற்றும் அதன் வளர்ச்சி :<br>- இலங்கையின் காணி ஆட்சி முறைமை பற்றிய வரலாறு<br>- ஆவணங்களைப் பதிவுசெய்வதன் மூலமாக காணி உரிமையை உறுதிப்படுத்தல்<br>- இலங்கையில் காணி உரித்தைப் பதிவுசெய்தல்<br>(ii) இலங்கையில் காணி சீரமைப்புத் திட்டம் :<br>- பிரித்தானியர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட வரட்சி நிலக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் மூலமாக ஏற்பட்ட சமூக மாற்றங்கள்<br>- 1935 ஆம் வருடத்தில் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் ஆரம்பித்தல் மற்றும் உழவர் மக்களுக்கு காணிகளின் உரிமையை வழங்குதல்<br>- 1972 ஆம் வருடத்தில் அறிமுகம் செய்யப்பட்ட காணிச் சீரமைப்பு ஆணைக் குழுச் சட்டம் மற்றும் அதன் ஊடாக ஏற்பட்ட காணிச் சீரமைப்புக்கள்<br>(iii) இலங்கையில் விவசாயப் பொருளாதாரம் :<br>- இலங்கையின் விவசாயக் கொள்கைகள்<br>- இலங்கையின் பிரதான உணவுப் பயிர்ச் செய்கை உற்பத்தி மற்றும் பாதுகாப்பு<br>- காணி அபிவிருத்தி மூலமான காணி அபிவிருத்தி மற்றும் பாதுகாத்தல்<br>- இலங்கையின் தேசிய உற்பத்தியில் விவசாயத் தொழிலின் பங்களிப்பு<br>- பல்வகைப் பயிர்ச் செய்கை<br>- நீர் பரிபாலனம்<br>- மண் பாதுகாத்தல் |

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாட விதானம் |
|---|---|
| | (iv) குடியேற்றத் திட்டங்கள் மற்றும் முகாமைத்துவம் :<br>- குடியேற்றத் திட்டங்கள் மற்றும் முகாமைத்துவம் தொடர்புடைய முக்கிய அம்சங்கள்<br>- சமூகப் பொருளாதார ஆய்வு<br>- மீள் குடியேற்றம்<br>- சமூகத்தின் அபிவிருத்தி<br>- அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி |

8. **நேர்முகப் பரீட்சை**.- எழுத்துப் பரீட்சையில் 40% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரர்களினால் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் திறமைக்கேற்ப ஒழுங்குமுறை வரிசையின் பிரகாரம், ஆட்சேர்ப்புச் செய்யவேண்டிய எண்ணிக்கைக்குச் சமனான விண்ணப்பதாரர்கள், சாதாரண நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் விண்ணப்பதாரிகளின் சான்றிதழ்களும் உடல் நிலை மட்டுமே பரிசீலிக்கப்படும்.

9. **பரீட்சை நிபந்தனைகள்** :

(i) பரீட்சைக் கட்டணம்.- இந்தப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இந்தக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 எனும் வருமானத் தலைப்பில் வரவு பெறும் வண்ணம் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு முன்பு இலங்கையில் உள்ள ஏதேனும் ஒரு அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகத்தில் விண்ணப்பதாரரின் பெயரில் பெறப்பட்ட பற்றுச்சீட்டை தங்களுடைய விண்ணப்பப்பத்திரத்தில் உரிய இடத்தில் கழன்று விடாதவாறு ஒட்டுதல் வேண்டும். இந்தக் கட்டணத்திற்கு மேலதிகமாக எந்த ஒரு கட்டணமும் அறவிடப் படமாட்டாது என தயவுடன் அறிவித்துக்கொள்கிறேன். இந்தப் பரீட்சைக்கெனச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்த ஒரு காரணம் பொருட்டும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மீள அளிக்கப்பட மாட்டாது. கட்டணம் செலுத்தப்பட்ட நிழற்படப் பிரதியை தன்னுடன் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

(ii) விண்ணப்பப்பத்திரத்தில் இலக்கம் 1 தொடக்கம் 6.3 வரையிலுமான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும் மிகுதியை மிகுதியாகவுள்ள பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன் அதில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மூல மொழி தன்னுடைய கையெழுத்திலேயே பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தில் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழியில் உள்ள விண்ணப்பப்பத்திரங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியில் உள்ள விண்ணப்பப்பத்திரங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும். அவ்வாறு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைந்தவாறும் அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்பத்திரம் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா எனவும் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு குறித்த பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா எனவும் மீண்டும் கவனத்துடன் பரிசீலிக்க வேண்டும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தின் ஒளிப்படப் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி தம்முடன் வைத்துக்கொள்வது உபயோகமாக இருக்கும் எனக் குறிப்பிட்டுக் கொள்கின்றேன்.

(iii) விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :

(அ) இந்த அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைந்தவாறு தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரங்கள் 2017, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பிரிவு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இந்தத் திகதிக்குப் பின்பு கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பப்பத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ள கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் "குடியேற்ற அலுவலர்கள் திறந்த ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்பத்திரம் விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதிபெற்றுள்ள மொழியில் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிசெய்வதற்கு அதிகாரம்பெற்றுள்ள ஒருவரினால் விண்ணப்பப்பத்திரம் மற்றும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதி செய்யப்படுதல் வேண்டும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களின் கையொப்பங்கள் குறித்த திணைக்களத்தின் தலைவர் அல்லது அவரினால் அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அலுவலரினாலும் ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பம் சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரச அல்லது பணிப்பாளர், பரிபாலன பாடசாலை அதிபர் அல்லது ரூபா 2,40, 360 அல்லது அதற்குமேல் வருடாந்த இணைந்த சம்பளம் பெறுகின்ற அரச அலுவலர் பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது நாயக சுவாமி அவர்கள் அல்லது ஏனைய மத வழிப்பாட்டுத் தளத்தின் மதகுரு அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய மதத் தலைவர் அல்லது முப்படைகளைச் சேர்ந்த அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் அல்லது ஆணைபெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

10. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முடிவின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கு உரிய பற்றுச்சீட்டை ஒட்டி சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பி உள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதை அடுத்து அவ்வாறு தெரிவித்து செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும். இவ்வாறான அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்றிருக்காவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் அமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவில் விசாரணை செய்தல் வேண்டும். இந்த விசாரணையில் தங்களுடைய முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் சரியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்பிலிருந்து வெளியிடத்தைச் சேர்ந்தவர் எனில், தங்களுடைய குறித்த விபரங்களுடன் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ள விண்ணப்பக்கடிதம் ஒன்றை குறித்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்தல் பொருத்தமாக அமையும். அவ்வாறு விசாரணையை மேற்கொள்ளும்போது தேவை ஏற்பட்டவிடத்து சமர்ப்பிப்பதற்காகத் தாங்கள் தங்களிடம் விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்பத்திரத்தைத் தபாலில் இடும் போது பெறப்பட்ட பதிவு செய்த கடித பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயார் நிலையில் வைத்துக்கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தங்களுடைய கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டுள்ள அனுமதிப்பத்திரத்தை பரீட்சை நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர் இருந்தால் அவரைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் நாள் அன்றே பரீட்சை மண்டப் பொறுப்புதாரரிடம் தங்களுடைய கையொப்பம் உறுதி செய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) பகுதி I : தொகுதி (IIஅ) வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகளினால் கடைப்பிடிக்க வேண்டிய நியமங்கள் குறித்து விண்ணப்பதாரர்களின் கவனம் வேண்டப்படுகின்றது.

(இ) பரீட்சை சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படும். விண்ணப்பிக்கப்பட்டுள்ள மொழி மூலம் பின்னர் மாற்றப்படுவதற்கு இடம் அளிக்கப்பட மாட்டாது.

(ஈ) பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம் பரீட்சை மண்டப் பொறுப்புதாரரிடம் உறுதி செய்யப்படுவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட கீழே தரப்பட்டுள்ள அடையாளப் பத்திரங்களில் ஒன்று மட்டும் போதுமானதாகும் :

(1) ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(உ) பரீட்சைப் பெறுபேறுகள்.- இந்த அறிவித்தலில் 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகளுக்குக் குறையாமல் புள்ளிகள் பெற்றுள்ள பரீட்சார்த்திகளின் பெயர்கள் உள்ளடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் அடங்கிய ஆவணம் காணி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைப் பெறுபேறுகளைத் தனிப்பட்டவாறு தெரிவிப்பதற்கு அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணைத்தளத்தில் வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ;

(ஊ) பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது பதவிக்கான தகைமைகளை நிறைவுசெய்து கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்வதாகவோ கருதப்பட மாட்டாது.

(எ) பரீட்சைகளை நடாத்துதல் அல்லது பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். குறித்த அறிவுறுத்தல்கள் மீறப்பட்டால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் குறித்த பரீட்சார்த்தியின் பரீட்சார்த்த நிலையை இரத்துச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை முறைக் கோவை விதிகள், அரச சேவை தொடர்பாக காலத்திற்குக் காலம் வழங்கப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கைத் தொழில்நுட்பச் சேவை தொடர்பான அமைப்பு விதிகள் மற்றும் அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களில் நிபந்தனைகள் இந்தப் பதவிக்கு ஏற்புடைத்தவையாக அமையும்.

12. விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்திசெய்யும்போது மிகுந்த கவனத்துடன் சரியான தகவல்கள் தரப்பட வேண்டும். இந்தப் பரீட்சையின் நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு ஏற்ப எவரேனும் விண்ணப்பதாரருக்கு தகைமைகள் இல்லை என வெளிப்படுத்தப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் குறித்த பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படுவதற்கு இடம் உண்டு.

13. இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்காத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

14. இந்த சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான அறிவித்தலில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் எனில் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியில் உள்ள அறிவித்தலே சரியானது எனக் கருத்தில் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆர். எம். சி. ஹேரத்,
காணி ஆணையாளர் நாயகம்.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/ 6, மிஹிகத மெதுர,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.

(அலுவலக உபயோகித்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் தரம் III குடியேற்ற அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)**

Open Competitive Examination for Recruitment of Colonization Officers Grade III of the Sri Lanka Technological Service - 2016 (2017)

வர்த்தமானி அறிவித்தலில் 6 ஆம் பந்திக்கு ஏற்ப பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுங்கள்)

(விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.)

1. பெயர் :

1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர், முதல் எழுத்துக்கள் இறுதியில் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : GUNAWARDHANA M. G. B. S. K.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.1 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
(அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கே அனுப்பப்படும்.)

3. பால் :
(பெண் - 1, ஆண் - 0) : ☐
(ஏற்புடைத்தான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுங்கள்)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

5. இனம் :
(சிங்களவர்-1, தமிழர்-2, இந்திய தமிழர்-3, முஸ்லிம்-4, ஏனையவர் 5) ☐
(ஏற்புடைத்தான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுங்கள்)

6. 6.1 திருமணமானவர்/ திருமணமாகாதவர் ? :
(திருமணமானவர்-2, திருமணமாகாதவர்-1) ☐
(ஏற்புடைத்தான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுங்கள்)

6.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

6.3 2017, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

7. வர்த்தமானி அறிவித்தலில் பந்தி 2 (i) மற்றும் (ii) இற்கு ஏற்ப இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிமை பெறுவதற்குத் தாங்கள் பெற்றுக்கொண்டுள்ள தகைமைகளைக் குறிப்பிடுங்கள் :

(i) கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.) பரீட்சை :
பரீட்சை சுட்டெண் :----.
வருடம் :----.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| ---- | ---- | ---- | ---- |
| ---- | ---- | ---- | ---- |
| ---- | ---- | ---- | ---- |
| ---- | ---- | ---- | ---- |
| ---- | ---- | ---- | ---- |

க. பொ. த. (உ. த.) பரீட்சை :
பரீட்சை சுட்டெண் :----.
வருடம் :----.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| ---- | ---- | ---- | ---- |
| ---- | ---- | ---- | ---- |

(ii) தொழில்சார் தகைமைகள் :----.

8. கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டைக் கழன்றுவிடாதவாறு விண்ணப்பப்பத்திரத்தில் ஒட்டுங்கள் :

(i) இலக்கம் :----. (ii) கட்டணம் செலுத்திய இடம் :----.
(iii) திகதி :----. (iv) செலுத்தப்பட்ட தொகை (ரூபா) :----.

(கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை வைத்து இருத்தல் பின்பு விசாரணைகளை மேற்கொள்வதற்கு முக்கியமாகும்.)

9. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் என்னுடைய அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவாறு உண்மை எனவும், இந்தப் பரீட்சைக்குச் செலுத்திய ................................ ஆம் இலக்க ......................... ஆந் திகதிய கட்டணத்திற்குரிய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டி உள்ளேன் எனவும் வெளிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள பரீட்சை நியமங்களுக்கு ஏற்பச் செயற்படுவதற்கு இணக்கம் தெரிவிக்கிறேன். இந்தப் பரீட்சை தொடர்பான நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு நான் தகைமை அற்றவன் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சை நடாத்தப்படும்போது அல்லது அதன் பின்னர் என்னுடைய பரீட்சார்த்தி நிலையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் ஏதேனும் தீர்மானத்திற்கு நான் கட்டுப்படுவேன் என உறுதியுரை வெளிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ................................. எனும் பெயருடைய விண்ணப்பதாரர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் என் முன்னிலையில் அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் பதிவு முத்திரை.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி (இறப்பர் முத்திரையுடன் உறுதிப்படுத்துங்கள்) :----.
திகதி :----.

11. விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் இருந்தால் குறித்த திணைக்களத் தலைவரின் சான்று :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ................................ தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர/தற்காலிகச் சேவையில் உள்ள அலுவலர் எனவும், அவர் என் முன்னிலையில் தன்னுடைய கையொப்பத்தை இட்டார் எனவும் சான்றுப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

11-919

## சட்டவரைஞர் திணைக்களத்தில் தரம் III ஆவணப்படுத்துகை உதவியாளர்களுக்கும் பதிப்பாசிரியர்களுக்குமான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை –2018

சட்டவரைஞர் திணைக்களத்தின் பதிப்பாசிரியர்களையும் ஆவணப்படுத்துகை உதவியாளர்களையும் ஆட்சேர்ப்பதற்கான இயைபான அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, பதிப்பாசிரியர்களுக்கும் ஆவணப்படுத்துகை உதவியாளர்களுக்குமான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை, 2018, பெப்ருவரி மாதத்தில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. (i) இப்பரீட்சையானது, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்படுமென்பதுடன், பரீட்சையை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடுதலும் தொடர்பாக அவரினால் விதிக்கப்பட்ட விதிகளுக்குப் பரீட்சார்த்திகள் அமைந்தோராகவும் உள்ளனர். பரீட்சையை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடுதலும் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்ட விதிகள் வர்த்தமானி அறிவித்தலில் தனிவேறாக அச்சிடப்பட்டுள்ளன. எவரேனும் பரீட்சார்த்தியினால் இவ்விதிகள் மீறப்படின், அவர்/அவள், பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

3. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்காக விதித்துரைக்கப்பட்ட பாடங்களுக்குப் பரீட்சார்த்திகள் ஒருதடவையில் அல்லது தனித்தனியாகத் தோற்றமுடியும். ஒன்றில் முழுப்பரீட்சைக்கும் அல்லது ஏதேனும் தனியொரு பாடத்துக்கு மட்டுமே முதற்றடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்குக் கட்டணங்கள் எவையும் விதிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்தி அடுத்துப்பின்னரான ஏதேனும் தடவையில் இப்பரீட்சைக்குத் தோற்றுமிடத்து, தனியொரு பாடத்துக்காக 250 ரூபாவான பரீட்சைக் கட்டணமும் முழுப்பரீட்சைக்கும் 500 ரூபாவும் விதிக்கப்படும். பரீட்சைக் கட்டணங்கள், பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் 2003-02-13 என்ற வருமானத் தலைப்பின் வரவுக்கு இலங்கையிலுள்ள ஏதேனும் அஞ்சலகத்தில் அல்லது உப அஞ்சலகத்தில் செலுத்தப்படலாம் என்பதுடன், வழங்கப்பட்ட பற்றுச்சீட்டானது விண்ணப்பப்படிவத்தில் தோதான இடத்தில் ஒட்டப்படுதலும் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைப் பரீட்சார்த்தி தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கலாம்). பணக்கட்டளைகள் அல்லது முத்திரைகள் எச்சூழ்நிலைகளின் கீழும் பரீட்சைக் கட்டணங்களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், செலுத்தப்பட்ட கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது அல்லது வேறேதேனும் பரீட்சைக்காகக் கைமாற்றப்படமாட்டாது.

4. **விண்ணப்பங்கள்**.- விண்ணப்பமானது இதனோடிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கிணங்கத் தயாரிக்கப்படுதல் வேண்டும். A4 அளவுத் தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பமானது தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 01 முதல் 05 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலிருத்தலும் வேண்டும். மீதிப்பாகம் தாளின் இரண்டாவது பக்கத்துக்குக் கொண்டுசெல்லப்படுதல் வேண்டும். சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களில், பரீட்சையின் பெயர் சிங்களத்துடன் சேர்த்து மேலதிகமாக ஆங்கிலத்திலும் விண்ணப்பத்தின் தலையங்கத்தில் காணப்படுதல் வேண்டும். அதேபோன்று, தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களிலும் பரீட்சையின் பெயர் விண்ணப்பத்தின் தலையங்கத்தில் ஆங்கிலத்திலும் காணப்படுதலும் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சிடப்படலாம் ஆனால் அது விண்ணப்பதாரரின் கையெழுத்தில் சரியாகவும் வாசிக்கக்கூடியதாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரரினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2017.12.18 அன்று அல்லது அதற்குமுன்னர் "கொழும்பு, அ.பெ.இல. 1503, பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்புகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பரீட்சைகள் ஆணையாளர்" தலைமையதிபதியை வந்தடையும் வகையில் பதிவஞ்சல்மூலம் திணைக்களத் தலைவரினூடாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் போது, பரீட்சையின் பெயர் உறையின் மேல் இடதுகைப்பக்க மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பங்களும் முடிவுறும் திகதிக்குப் பின்னர் பெறப்பட்ட விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நிரப்பப்பட்ட விண்ணப்பமானது மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு இசைந்தொழுகவிருப்பதனை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இசைந்தொழுகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கவும்படும். (விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியொன்றை விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும்).

5. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் எந்தப் பாடம்தொடர்பில் அத்தகைய பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்றாரோ அந்தப் பாடம் தொடர்பில் அவரது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தின்

மேற்பார்வையாளரினது திருப்திக்கு எண்பித்தல் வேண்டும். அத்தகைய நோக்கத்துக்காகப் பின்வரும் ஆவணங்களுள் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(i) ஆட்களைப் பதிவுசெய்தல் திணைக்களத்தின் ஆணையாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை; அல்லது

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டொன்று.

மேற்கூறப்பட்ட ஆவணங்களுள் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு இயலாதவர்களாகவுள்ள பரீட்சார்த்திகளின் பரீட்சார்த்துவம் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் முடிவு இறுதியானதாகும்.

6. வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளையுடையவர்கள் மட்டுமே விண்ணப்பங்களைச் செய்துள்ளனரென்ற ஊகத்தின்மீது பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி, மேற்கூறப்பட்டவாறு தமது விண்ணப்பங்களை அவருக்கு ஆற்றுப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேரசூசியின் பிரதிகளுடன் சேர்த்து அனுமதி அட்டைகளை வழங்குவார். அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டதனை உடனடுத்து இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அப்பயன்பட்ட அறிவித்தலொன்றைச் செய்தித்தாள்களில் வெளியிடும். சொல்லப்பட்ட அறிவித்தல் வெளியிடப்பட்டதிலிருந்து 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னர் அனுமதி அட்டைகளைப் பெறாதுள்ள எவரேனும் விண்ணப்பதாரர்கள் இருப்பின், அத்தகைய பரீட்சார்த்திகள், அவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களினூடாகப் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது விண்ணப்பதாரர், அவரது முழுப்பெயரையும், முகவரியையும் தேசியஅடையாளஅட்டை இலக்கத்தையும், பரீட்சையின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பதாரர் அத்தகைய விசாரிப்பைச் செய்யும் போது, விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பத்தின் பிரதியொன்றையும், கட்டணங்களைச் செலுத்தும்போது பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும், பதிவுசெய்யப்பட்ட பொருளுக்கான பற்றுச்சீட்டின் பிரதியொன்றையும் தயாராக வைத்திருத்தலும் வேண்டும்.

விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே வதிபவராகவிருப்பின், தொலைநகலினூடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அவர் பெறுவதனை இயலச்செய்யும் வகையில் மேலே கொடுக்கப்பட்ட பரீட்சார்த்தியின் தொலைநகல் இலக்கத்தையும் வேறு தகவல்களையும் குறிப்பிட்டு, தொலைநகலினூடாகப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவொரு கோரிக்கைக் கடிதத்தினூடாக விசாரிப்புகளைச் செய்வது பயனுள்ளதாகவிருக்கும்.

7. விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் திணைக்களத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரரொருவர், அவருக்கு கொடுக்கப்பட்ட சுட்டெண்ணின்கீழ் அவருக்கு விதித்துரைக்கப்பட்ட மண்டபத்திலும் பரீட்சைத் திகதியன்றும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவரது கையொப்பம் எந்த அனுமதி அட்டையில் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றதோ அந்த அனுமதி அட்டை பரீட்சையின் மேற்பார்வையாளருக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரரொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

8. விண்ணப்பதாரரினால் வகிக்கப்பட்ட பதவியும் விண்ணப்பத்தைச் செய்த நேரத்தில் வேலைத்தளமும் பரீட்சை தொடர்பான எல்லா விடயங்களுக்கும் இயைபாகவுள்ளதுடன், விண்ணப்பத்தை அனுப்பிய பின்னர் அது தொடர்பில் ஏற்படுகின்ற எவையேனும் மாற்றங்கள் கவனத்திற்கொள்ளப்படவும் மாட்டாது.

9. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர்களை இயலச்செய்து பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்களுக்கான கடமை விடுமுறையை திணைக்களத் தலைவர் அங்கீகரித்தல் வேண்டும். பயணச்செலவுகள் எவையும் செலுத்தப்படமாட்டாது.

10. இப்பரீட்சையானது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் மட்டுமே நடாத்தப்படும். விண்ணப்பதாரர் போட்டிப் பரீட்சையினூடாகப் பகிரங்க சேவையைச் சேர்ந்திருப்பின், அவர் எந்த மொழிமூலம் சொல்லப்பட்ட போட்டிப்பரீட்சைக்குத் தோற்றினாரோ அந்த மொழிமூலத்தினூடாக அவர் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டுமென்பதுடன், ஒரு போட்டிப்பரீட்சைக்கும் தோற்றாமல் பகிரங்கசேவையைச் சேர்ந்துள்ள எவரேனும் விண்ணப்பதாரர், அவர் எந்தப் பரீட்சையினூடாகப் பகிரங்க சேவையினுட் பிரவேசிப்பதற்குத் தகைமைபெற்றாரோ அந்தப் பரீட்சைக்கு அவர் தோற்றிய

மொழிமூலத்தினூடாக இப்பரீட்சைக்குத் தோற்றுதலும் வேண்டும். விண்ணப்பதாரர் ஒரே மொழியில் பரீட்சையின் எல்லாப் பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரரொருவர், தமது விண்ணப்பத்திற் குறிப்பிடப்பட்ட மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

11. இப்பரீட்சை கொழும்பில் மட்டுமே நடாத்தப்படும்.

12. **பரீட்சை நடவடிக்கைமுறை**.- மேலேயுள்ள பதவிகளுக்கு இயைபான பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டுள்ளது.

| *வினாத்தாள்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைய வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| (1) தாபன மற்றும் நடவடிக்கைமுறைக் கோவை | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| (2) நிதி ஒழுங்குவிதிகளிலான அடிப்படை அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 |

**பாடவிதானம்**.

| *பரீட்சையின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| 1. தாபன மற்றும் நடவடிக்கைமுறைக் கோவை. | 1. தாபனக்கோவையின் 1 ஆம் தொகுதியின் அத்தியாயங்கள் vii, viii, xii, xiv,xxiv.<br>2. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை முறைசார் விதிகள் |
| 2. நிதி ஒழுங்குவிதிகளிலானஅடிப்படை அறிவு. | நிதி ஒழுங்குவிதிகளின் அத்தியாயங்கள் iv,v,vi,ix. |

**குறிப்பு**.

* விண்ணப்பதாரர் மேலேயுள்ள பாடங்களுக்குத் தனித்தனியாகத் தோற்றமுடியும்.
* விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மேலேயுள்ள பரீட்சையில் சித்தியடைவதற்குத் தவறியமை சம்பள உயர்வின் பிற்போடுகையை விளைவிக்கும்.

13. விண்ணப்பதாரரொருவருக்கு அனுமதி அட்டையின் வழங்குகை, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகவுடையவராகவிருப்பதற்கான தகைமைகளை நிறைவேற்றியுள்ளாரென்பதாகக் கருதப்படுதலாகாது.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாகச் சட்டவரைஞரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

15. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமையிருப்பின், சிங்கள அறிவித்தலே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

சட்டவரைஞர்,
சட்டவரைஞர் திணைக்களம்.

சட்டவரைஞர் திணைக்களம்,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்டவரைஞர் திணைக்களத்தின் தரம் III பதிப்பாசிரியர்களுக்கும் ஆவணப்படுத்துகை உதவியாளர்களுக்குமான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

அலுவலகப் பாவனைக்கு மட்டும்

பரீட்சார்த்தி எந்த மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உட்கருதுகின்றாரோ அந்த மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(இயைபான இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

1. 1.1 முழுப்பெயர் (பெரிய ஆங்கில எழுத்துக்களில்):.................................
உதாரணம் (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA,.)

1.2 கடைசிப்பெயரை முதலிலும் பின்னைய பெயர்களின் முதலெழுத்தை அதன் பின்னரும் கொடுத்து பெரிய ஆங்கில எழுத்துக்களில் பெயர்: ..........................................................................................
(உதாரணம் GUNAWARDANA H.M.S.K)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :...........................................................................

2 2.1 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (பெரிய ஆங்கில எழுத்துக்களில்) : ..........................................
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அஞ்சலிடப்படும்)

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின் / நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) : ......................................

2.3 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :............................................................

2.4 தொலைபேசி இல.:...........................................................

3. தேசிய அடையாள அட்டை இல. | | | | | | | | | | |

4. ஆணா/ பெண்ணா ?

4.1 ஆண் - 0
பெண் - 1

(இயைபான இலக்கத்தைக் கூட்டில் உட்புகுத்தவும்)

5. இவ்வாண்டில் நீர் எப்பாடத்துக்கு /பாடங்களுக்குத் தோற்றுகின்றீரோ அப்பாடம் /பாடங்கள் :

| தொடரிலக்கம் | பாடம் | பாட இல. |
|---|---|---|
| | | |
| | | |

6. பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

7. தற்போதைய பதவி

7.1 பதவி :……………………………….

7.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :…………………………………………

8. 8.1 நீர் முதற்றடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றீரா:

8.2 நீர் முதற்றடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றாதிருப்பின், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தொகை:

8.3 பற்றுச்சீட்டில:

8.4 திகதி:

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (இயைபாகவிருப்பின் மட்டுமே).(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை உம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கலாம்) |

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், இவ்விண்ணப்பத்தில் என்னால் சுட்டிக்காட்டப்பட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையவராகவுள்ளேனென்றும்,…………… ரூபாவான பரீட்சைக் கட்டணத்தை நான் செலுத்தியுள்ளேனென்றும், பற்றுச்சீட்டானது இத்துடன் இணைக்கப் பட்டுள்ளதென்றும் குறிப்பிடுகின்றேன். பரீட்சையை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடுதலும் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட விதிகளுக்கு நான் அமைந்தவராகவிருப்பேனென்றும் மேலும் குறிப்பிடுகின்றேன்.

…………………………………
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:…………………………

திணைக்களத்தலைவரின் அல்லது திணைக்களத்தலைவரின் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரின் முன்னிலையில் விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

கையொப்பத்தின் அத்தாட்சிப்படுத்துகை:

திரு./திருமதி/செல்வி……………………………………………………. என்பவர், நான் தனிப்பட்டமுறையில் அறிந்தவரும் எனது திணைக்களத்தைச் சேர்ந்தவருமான அலுவலரொருவராக உள்ளாரென்றும், அவர் என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டாரென்றும், விதித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதன் மீது பெறப்பட்ட பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளாரென்றும் இத்தால் குறிப்பிடுகின்றேன்.

…………………………..,
அத்தாட்சிப்படுத்துகின்ற அலுவலரின் கையொப்பம்.

பெயர் :……………………………………

பதவிப்பெயர் :…………………………….

முகவரி:……………………………………..

திகதி:………………………………………

(அலுவலகமுறையான இலச்சினையை இடுவதன்மூலம் உறுதிப்படுத்தவும்)

திணைக்களத்தலைவரின் சான்றிதழ் :

1. இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்களை நான் நுனித்தாராய்ந்தேன் என்றும்; அத்துடன்
2. சம்பந்தப்பட்ட அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகவுடையவராக உள்ளாரென்றும்,

சான்றுப்படுத்துகின்றேன்.

………………………….,
திணைக்களத்தலைவரின் கையொப்பம்
மற்றும்
அலுவலகமுறையான இலச்சினை

பெயர் :……………………………………
பதவிப்பெயர் :…………………………….
முகவரி:……………………………………..
திகதி:………………………………………

11-990

---

திருத்தம்

**பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2015(I) (2017)

2017.11.02 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 2044 இல் அறிவித்தல் இல. 11-351 இல் மேற்கூறப்பட்ட பரீட்சையின் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் 5.0 ஆவது பந்தியானது கீழ்வருமாறு திருத்தப்படல் வேண்டும் :

5. நீங்கள் தோற்றும் பாடம்/பாடங்கள் :

| பாடம் | பாட இல. |
|---|---|
| | |
| | |
| | |

கே. வீ. பீ. எம். ஜீ. கமகே,
ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2017, நவெம்பர் 08.

11-1079